www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

சித்திரை 1999 | இதழ் 1

**"கனக்க கஷ்ரப் பட்டுட்டோம். சொந்த இடத்திலேயும் வாழ ஏழாத நிலை. தீர்வு என்ற கதையை விடுங்க. உப்பிடியே நெடுகலும் போக ஏழாது!"**

**-சனத்தின் குரல்-**

# தாயகம் எங்கும் புதைகுழிகள்!

**600** இற்கு மேற்பட்ட தமிழ ர்கள் செம்மணியில் புதைக்கப்பட்ட செய்தியால் உலுக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத் தின் மையப் பகுதியிலேயே மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டமை பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 1996 இல் சிறிலங்கா படைகள் வட தமிழீழத்தை ஆக்கிரமித்த பின்னர் நூற்றுக் கணக்கான தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். இது குறித்து சிறிலங்காவின் அரசுத் தலைவரிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் கேட்கப்பட்ட போது தமது படைகள் அவர்களை கைதுசெய்யவில்லை என்றும் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருக்கலாம் என்றும் ஏளனமாக பதிலளித்தனர்.

சிறிலங்கா படைகள் தமிழீழத்தில் தான் ஆக்கிரமித்துள்ள ஒவ்வொரு பகுதியிலும் தமிழர்களை கூட்டுப் படுகொலைக் குட்படுத்தி வருகின்றது. சென்ரல் கேம்ப், கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, மயிலம்பாவெளி, குமாரபுரம், செம்மணி என்பன அறியப்பட்டுள்ள சில உதாரணங்களாகும். எனவே வடதமிழீழத்தில் மட்டுமல்ல தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நாம் புதைகுழிகளை தேட வேண்டியவர்களாக உள்ளோம். இப்புதைகுழிகள் சிறிலங்கா அரசின் இன அழிப்பிற்கான உயிருள்ள சான்றுகளாக அமைந்திருக்கின்றன. இவை அனைத்திற்கும் இந்த ஆக் கிரமிப்பாளர்களே முழுப்பொறுப்பாளிகள்.

சிங்கள அரசுத் தலைமையையும் படைத்தலைமையையும் அவர்களின் ஏவலாட்களையும் இன அழிப்புக் குற்றவாளிகள் என நாம் பிரகடனம் செய்கின்றோம். புதைக்கப்படும் ஒவ்வொரு உடலுக்கும் பறித்தெடுக்கப்படும் ஒவ்வொரு உயிருக்கும் இவர்கள் பதில் கூறியே ஆகவேண்டும். இதற்கான தண்டனையை நமது புரட்சிகர மக்கள் நீதிமன்றில் இவர்கள் நிச்சயம் அடைந்தே தீருவர்.

## தமிழீழ அரசு: தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை!

ஈழத்தமிழராகிய நாம் ஒரு தனியான தேசம். தேசம் என்பது புவியியல் பரப்பு சார்ந்ததாக அல்லாமல், தமது வாழ்வைத் தாமே தீர்மானிக்கும் உரிமையைக் கொண்ட, தமக்கென சொந்த அரசியல் அதிகாரத்தைக் கொண்ட ஒரு தனியான மக்கள் சமூகம் என்ற விரிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. நாம், எமக்கென ஒரு தாயக பூமியைக் கொண்டிருக்கின்றோம். இத் தாயகத்தில் நாம் நீண்ட, தனியான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றோம். எமக்கென சொந்த கலாச்சார மரபுகள் இருக்கின்றன. எமது வாழ்க்கை முறைகள் தனித்துவமானவை. இவற்றோடு, அரை நூற்றாண்டுக்கும் மேலாக நாம் சிறிலங்கா அரசின் ஆதிக்கத்தையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்து, வீரம் செறிந்த போராட்டத்தை நடாத்தி வருகிறோம். இப் போராட்டத்தில் நாம் வெளிப்படுத்தியிருக்கின்ற துணிவு, வலிமை, அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றின் மூல மாக எமக்கென ஒரு தனியான அரசியல் வாழ்வு அவசியம் என்பதை உலகின் முன் தெளிவாகவும், உறுதியாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

நாம் ஒரு தனியான தேசம் என்ற வகையில், ஏனைய தேசங்களுக்கு இருப்பது போன்ற உரிமைகள் அனைத்தும் எமக்கும் இருக்கின்றன: எமது நிலத்தின் மீதும், எமது கடல்பிராந்தியத்தின் மீதும், எமக்குரிய வான் பரப்பின் மீதும் எமக்கு பூரண ஆதிக்கம்

( தொடர்ச்சி 2ம் பக்கம்)

## நமது பிரச்சனை அவர்களுக்கு புரியாது!

ஒரு சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சி போர்முனையில் படுதோல்வி கண்டு, ஏராளம் படைக்களங்களை பறிகொடுத்தது சிங்கள அரசுப்படைகள். பாரிய தளமும் விடுவிக்கப்பட்டு படைக்களங்கள் பறிக்கப்பட்டதன் பலாபலன்கள் அடுத்து வரும் மாதங்களில் எப்படி அமையும் என்பது எதிரிகளை நிலைகுலையச்செய்திருந்தது. ஆகக்குறைந்தது அப்படைக்கலங்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்த முடியாதபடி அழித்தொழிக்க வேண்டும். புலிகளின் பலத்தை நிர்மூலம் செய்ய வேண்டும். எனவே விரைவில் பாரிய தாக்குதலொன்றை தொடக்க வேண்டும். தமது தேர்தல் வெற்றிக்காக தமிழ் தேசத்தை குருதியில் தோய்க்க வேண்டும். பட்டினியில் வதக்கி எடுக்க வேண்டும். இதற்கெல்லாம் மொத்தமாக திட்டங்களை வரைந்தது சிங்கள அரசு. புலிகளின் சமாதான அழைப்பிற்கு செவி கொடுத்து தீட்டிய திட்டங்களை கைவிட முடியுமா என்ன?

சமகாலத்தில் உலகையும் மக்களையும் ஏய்க்க சர்வமத தூதுக்குழுவை பயன்படுத்திக்கொண்டது அரசு. பாவம் அவர்கள். ஆக்கிரமிப்பாளர்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ அவகாசம் பெற்றுக்கொடுத் தனர். சர்வமதத் தூதுக்குழு மற்றும் சமய நிறுவனங்களின் சமாதான ஊர்வலமும் பொதுக்கூட்டமும் சிறிலங்கா தலைநகரில் நடைபெற்றது. ***"யுத்தம் வேண்டாம், சமாதானம் வேண்டும்"*** என்பது அங்கு பிரதான கோசமாக இருந்தது. யார்தான் யுத்தம் வேண்டும் என்றது? ஏதோ அரசு யுத்தத்தை விரும்பாதது போலவும் புலிகள் தான் யுத்ததிற்காக விடாப்பிடியாக நிற்பது போலவும் ஒரு தோற்றப்பாட்டை தரும் தொணி அக்கோசத்தினுள்ளே புதைந்திருப்பது தெரிந்தது. யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கோசிப்பதை விட "தமிழர் மீதான அனைத்து இனவாத அடக்குமுறைகளையும் நிறுத்து, அவர்களது அடிப்படை அரசியல் ஜனநாயக உரிமைகளை வழங்கு என்றல்லவா கோசித்திருக்க வேண்டும். யுத்தத்தின் தோற்றுவாயை அல்லாவா புட்டுக்காட்டியிருக்க வேண்டும். யுத்தம் இருந்தால் போல் இரு தரப்பிற்கிடையில் சட்டென முளைத்தது போல காட்டும் ஒரு முனைவு அல்லாமல் வேறென்ன?

இந்த பொதுக்கூட்டத்தில் இன்னுமொன்றையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. கூட்டத்தின் முன்னரங்கில் ஒரு பெரும் கட்அவுட் வைக்கப்பட்டிருந்தது. மனித உரிமையாளர்களால் யுத்தத்தின் கோரத்தை எடுத்துக்காட்ட முன்வைக்கும் பாரிய கட்அவுட் அதுவாகும். ஒரு பெரிய மண்டை ஓடு. அதன் ஒரு பக்க செவி வழியே சீருடையுடன் தலைக்கவசங்கள் அணிந்து துப்பாக்கியுடன் உள்ளே நுழையும் சிங்கள அரச படையினர். மறுபுறச்செவி வழியே புலித் தலையினராக ஆயுதமேந்தி உள்ளே நுழையும் விடுதலை போராளிகள். பெரிய மண்டையோட்டின் வாய் வழியாக ஏராளம் மண்டை ஓடுகளும் எலும்புகளும் குவியல் குவியலாக வெளிவருவதாக அதில் காட்டப்பட்டுள்ளது.

( தொடர்ச்சி 7ம் பக்கம்)

## பறிபோகும் தமிழர் மண்!

பலாலியில் அமைந்திருக்கும் சிறிலங்கா விமானப்படைத் தளத்தை விஸ்தரிப்பது எனும் பெயரில் வலிகாமம் மக்களது பாரம்பரிய வாழ்விடத்தை அபகரிக்கும் சிறிலங்கா அரசின் இரகசியத் திட்டமொன்று அம்பலத்திற்கு வந்துள்ளது.

அவ்விஸ்தரிப்பை 'ஒத்தி" வைக்கும்படி சிங்கள அரசுத்தலைவர் கட்டளையிட்டுள்ளாராம். இது அப்பட்டமான கண்துடைப்பு என்பது நம் அனைவருக்கும் தெரியும். சிறிலங்காவின் முப்படைத்தளபதி தானே முன்னின்று அமுலாக்கும் இராணுவத் திட்டங்களை ஒத்திவைப்பதென்பது, இரகசியமாக அது தொடர்ந்து அமுலாக்கப்படும் என்பதே வரலாறு.

தமிழர் மண் சிறிலங்கா அரசால் அபகரிக்கப்படுவது இது ஒன்றும் முதற்தடவையல்லவே. 1940களில் இலிருந்தே இவர்கள் திட்டமிட்ட முறையில் தென்தமிழீழத்தில் தமது மண்பறிப்பைத் தொடங்கிவிட்டனர். இது படிப்படியாக வவுனியாவரை விஸ்தரிக்கப்பட்டு இன்று வவுனியாவில் சிங்களக் கிராமங்களுக்கான தனியான உதவி அரச அதிபர் பிரிவுகள் அமைத்திடுமளவுக்கு பலம் பெற்றுவிட்டது. அது மாத்திரமன்றி தமிழர் தாயகத்தை துண்டாடும் நோக்குடன் முல்லைத் தீவையும் திருகோணமலையையும் ஊடறுத்து பதவியா சிங்களக் கிராம உருவாக்கம்....... இவற்றில் ஒரு சிறு கூறு மட்டுமே பலாலி.

இதற்கான ஒரே தீர்வு இந்த ஆதிக்க கும்பலிடம் மண்ணை பறிக்க வேண்டாமென விண்ணப்பம் செய்வதல்ல, மாறாக ஆக்கிரமிப்பாளர்களை தமிழீழ மண்ணிலிருந்து முற்றாகவும் நிரந்தரமாகவும் துரத்தியடிப்பதே. இது திண்ணம். விரைவில் தமிழீழ ஜனநாயக குடியரசை நிறுவுவோம். அப்போது சீருடை களைந்து சிவிலியன்களாக வரட்டும். தமிழீழ மண் இவர்களையும் அரவணைக்கும் வாழ்வழிக்கும்.

**உள்ளே...**

- ✍ **ஆணாதிக்க அரசியலில் பெண்களின் பாத்திரம் !**
- ✍ **தமிழீழ விடுதலையும் சிறிலங்கா அயுதப் படைகளும் !**
- ✍ **நாம் எந்த வகையில் வித்தியாசமானவர்கள்?**

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ அரசு...

இருக்கின்றது: எமது ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளின் மீது, எமக்கேற்ற விதத் தில் பொருளாதார அபிவிருத்தி முயற்சி களை மேற்கொள்வதற்கும், உள்ளகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற் கும் நாம் முழு உரிமையைக் கொண்டிருக்கின் றோம், எமது கலாச்சார மரபுகளை பேணி வளர்ப்பதற்கும், நாம் விரும்பும் விதத்தில் புதிய, முற்போக்கான கூறுகளை அவற்று டன் இணைத்து வளப்படுத்துவதற்குமான உரிமை எமக்கு உண்டு. இவை அனைத்திற்கும் மேலாக, எமக்கென ஒரு சுதந்திரமான, இறைமைமிக்க அரசைக் கொண்டிருப்பதற்கும், இவ்வரசின் மூலமாக சர்வதேச சமூகங்களுடன் சமத்துவ அடிப்படையில் உறவுகளைப் பேணுவதற்கும் எமக்கு உரிமை உண்டு.

எனினும் சிறிலங்கா அரசானது எம்மிடமிருந்து பிரிக்க முடியாத இத்தகைய உரிமைகளை முற்றாக மறுப்பதோடு, எமது **தேச இருப்பை** அழிப்பதற்காக திட்டமிட்ட ரீதியில், மூர்க்கமாக செயற்பட்டும் வருகின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலமும், இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்பின் மூலமும் எமது தாயகப் பகுதியில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது. எமது தாயகத்தில், நாம் கொண்டிருக்கின்ற வரலாற்றுத் தடயங்களை அழித்து வருகின்றது. எமது மக்களிடையே சுதந்திரமான, நெருக்கமான உறவுகள் ஏற்படுவதை தடுத்து வருகின்றது. எமது பொருளாதாரத்தையும் அதன் இயல்பான வளர்ச்சியையும் திட்டமிட்ட ரீதியில் சீர்குலைத்து வருகின்றது. எம் தாயகத்தில் பல்துறை சார்ந்த அபிவிருத்திகளும், உள்ளகக் கட்டமைப்பு வளர்ச்சிகளும் ஏற்படுவதைத் தடுத்து வருகின்றது. எமது கலாச்சார மரபுகளை அழித்தும், அவற்றை நாம் சுததந்திரமாக பேணி வளர்ப்பதற்கான உரிமைகளை மறுத்தும் வருகின்றது, எமது தாயகத்தின் இயற்கை வளங்களை கண்மூடித்தனமாக சிதைத்தழித்துக் கொண்டிருக்கின்றது. எமது மக்களை குறிப்பாக ஆற்றலும் வலிமையும் மிக்க இளஞ் சந்ததியினரை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கின்றது, எமது மக்களை கொடூரமான யுத்த சூழலுக்குள் தொடர்ச்சியாக அழுத்தி வைத்தும் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியும் அவர்களை உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் கடுமையான நோயாளிகளாக்கி வருகிறது. இதன் மூலமாக வலுவற்ற, ஆரோக்கியம் குன்றிய உடல், உள ரீதியில் ஊனமுற்ற சமூக மாக எம்மை மாற்றியமைக்க முயற்சிக்கின்றது. இவை அனைத்தின் மூலமாக, எமது தேச இருப்பை அழித்து, எம்மை நிரந்தரமாக தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு, சிறிலங்கா அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

சிறிலங்கா அரசின் இத்தகைய நடவடிக்கைகள் தற்செயலானவை அல்ல, யாரோ சில சிங்கள அரசியல்வாதிகளினால், அல்லது இராணுவ அதிகாரிகளினால் திட்டமிட்டு செயற்படுத்தப்படுபவையும் அல்ல. மாறாக இவை, சிறிலங்கா அரசின் அடித்தளமாகவுள்ள சிங்கள பௌத்த பேரின வாத பண்புகளினதும், ஆக்கிரமிப்புப் பண்புகளினதும் தெளிவான வெளிப்பாடுகள், ஒரு தேசம் பிற தேசம்/தேசங்களை ஒடுக் கின்ற போது, அங்கு செயற்படுகின்ற அரசி யல் விதிகளினால் தீர்மானிக்கப்படுகின்ற விளைவுகள் இவை.

சிறீலங்கா அரசுக்குரிய பேரினவாத அடித்தளமானது, ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் காலத்திலேயே இடப்பட்டு விட்டது. இக்காலகட்டத்தில் உருவான சிங்கள தரகுமுதலாளித்துவப் பிரிவினரும், ஏற்கெனவே சிங்கள மக்களிடையே செல்வாக்குப் பெற் றிருந்த நிலவுடமைப்பிரிவினரும், ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு உறுதியுடன் போராடக் கூடிய பண்பை வெளிப்படுத்தவில்லை. மாறாக இவர்கள் தமது அரசியல், பொருளாதார நலன்களை உயர்த்திக் கொள்ளும் நோக்கில் ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தமிழர்கள் போன் றோருடன் முரண்படுபவர்களாக மாறினார்கள். சிங்கள மக்க ளின் அரசியல் தலைமையாக தம்மை நிறுவிக்கொள்ளவும், அவர்களை எப்போதும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக் கவும் ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள், மலைய கத் தமிழர்கள் போன்றோரை சிங்கள மக்க ளின் எதிரிகளாகவும், சிங்கள மக்களை சுரண்டுபவர்களாகவும், சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக் கும் காரணமாணவர்களாகவும் அடையா ளம் காட்டினார்கள்.

ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் காலத்திலேயே, சிங்கள அரசியல் தலைமை மற்றும் ஆளும் பிரிவினர்கள் மத்தியில் தோன்றி விட்ட இத்தகைய பேரினவாத போக்கு, இன்றுவரை தணியவில்லை. மாறாக, இப்போக்கு மேலும் மேலும் வேகம் பெற்றே வந்திருக்கின்றது. ஒவ்வொரு தேர்தலும் இப்போக்கை தீவிரப் படுத்தி யுள்ளது, சிறீலங்கா அரசிற்கு எதிராக, சிங்கள மக்கள் மத்தியில் உணர்வலைகள் தோன்றுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்போக்கு கூர்மை அடைந்தது. ஏனைய சமூகங்களை அடக்கி வைப்பதையும், ஆக்கிர மிப்பதையும் இலக்காகக் கொண்டு, சிங்கள அரசியல் தலைமையினாலும், ஆளும் பிரிவினரினாலும் முன்னெடுக்கப் பட்ட இப்பேரினவாதப் போக்கு கால ஓட் டத்தில் சிங்கள தேசத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரையும் தன்னுள் இணைத் துக் கொண்டது. தரகு முதலாளிகள், நிலவுடமைப் பிரிவினர், பௌத்த மத நிறுவ னங்களைச் சேர்ந்தவர்கள், தொடர்பூடகங் களைச் சேர்ந்தோர், சிங்கள அரசியல் வாதிகள், அரசபடையினர், நிர்வாக மற்றும் கலாச்சாரத் துறை சார்ந்தோர் என சிங்கள தேசத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியிலும் பேரினவாதப் போக்குகள் ஆழவேரூன்றி விட்டன. இவர்கள் அனைவரும் தமது பொருளாயத மற்றும் ஆன்மீக ரீதியான நலன்களை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு, ஏனைய சமூகங்களின் உரிமைகளையும், நலன்களையும் பறிப்பது ஒரு முக்கிய வழிமுறையாக மாறி விட்டது. இப் பிரிவினர்களின் எண்ணிக்கையும், அவர்களின் நலன்களும், தேவைகளும், அதிகரிப்பதற் கேற்ப, ஏனைய சமூகங்கள் மீதான அடக்கு முறைகளும், ஆக்கிரமிப்புகளும் மேலும் மேலும் அதிகரிக்கின்றன, தீவிரமடை கின்றன.

சிங்கள தேசத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர்கள் மத்தியிலும் ஆழ வேரூன்றி விட்ட பேரினவாத, ஆக்கிரமிப்பு போக்குகள் இனியும் மறைந்து விடப்போவதில்லை. இந்த உண்மையைத்தான், மீண்டும், மீண்டும் வெளிப்படுகின்ற நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன. இப்பிரிவினர் தமது பேரினவாத மற்றும் ஆக்கிரமிப்புப் போக்குகளை கைவிடுவார்களாயின், அதன் காரணமாக தமது நலன்களுக்குரிய பிரதான ஊற்று மூலத்தை இழக்கக் கூடிய நிலை ஏற்பட்டு விடும், தமது அதிகாரங்க ளையும், செல்வாக்கையும் கணிசமாக இழக்க வேண்டி ஏற்படும். ஆனால் அதிகாரத் தையும், செல்வாக்கையும் தமது கரங்களில் கொண்டிருப்பவர்கள், அவற்றின் மூலமாக தமது நலன்களை தொடர்ச்சியாக பேணி வருபவர்கள் அவற்றை தாமாகவே கைவிட் டதாக வரலாறு எதுவுமேயில்லை. எனவே இப் பிரிவினர் ஈழத்தமிழர், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் மீதான தமது ஆதிக்கத்தையும், ஆக்கிரமிப்புகளையும் தொடர்ந்தும், தீவிரமாக மேற்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள்.

இவற்றைச் சாத்தியமாக் குவதற்கு, சிங்கள மக்களின் ஆதரவை இப்பிரிவினர் தொடர்ச்சியாகப் பெறுவது அவசியம். எனவே இவர்கள், ஈழத்தமிழர்களும், முஸ் லிம்களும், மற்றும் மலையகத்தமிழர்களும், சிங்கள மக்களை சுரண்டிக் கொழுக்கி றார்கள் என்றும், சிங்கள மக்களின் உரிமை களைப் பறித்து, அவர்களை இந்நாட்டி லிருந்து விரட்டியடிக்கத் திட்டமிடுகிறார்கள் என்றும் திரும்பத் திரும்ப, உணர்ச்சிகரமாக பிரச்சாரப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

சிறீலங்காவின் அரசியல் (மற்றும் பொருளாதார, கலாச்சார) தளத்தில் பேரினவாத, அடக்குமுறைப் போக்குகள் ஒரு விசச் சூழல் போன்று ஏன் திரும்பத் திரும்ப தோன்றிக் கொண்டிருக்கின்றன? சர்வ அதிகாரமும் பெற்ற ஒரு தலைவரால் அல்லது குழுவினரால் இப்போக்குகளை முற்றாகவே ஒழிக்க முடியாதா? இக்கேள் விகளுக்கு விடைகளைக் காண வேண்டுமா யின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் அரசியல் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பது குறித்து விளங்கிக் கொள்வது அவசியம். ஒரு சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவினர் களுக்கிடையில் நிலவுகின்ற உறவுகள், அவர்களின் நலன்கள், இந்நலன்களைப் பேணிக் கொள்வதற்கு அப்பிரிவினர் பயன்படுத்துகின்ற வழி முறைகள், சர்வதேச நிலைமை போன்ற பல்வேறு காரணிகளின் ஒன்று கலத்தலால், ஒரு குறிப்பிட்ட கட் டத்தின் அரசியல் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறு ஒன்று கலப்பதால் தோற்றுவிக் கப்படுகின்ற விளைவுகள், அக்கட்டம் முழுவதும், மாற்ற முடியாதவைகளாக, நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றலைப் பெறுகி ன்றன. இவையே அக்கட்டத்திற்குரிய **அரசி யல் விதிகளாக** அமைகின்றன. இந்த அரசியல் தளத்தில் செயற்படுகின்ற ஒவ் வொருவரும், இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டிய வர்களாக இருக்கின்றார்கள். ஒருவர் இந்த விதிகளை எந்தளவுக்கு அனுசரித்து செயற்படுகின்றாரோ, அந்தளவுக்கு அவர் அரசியலில் 'உயர்நிலையை' அடைய முடிகின்றது. இவ்விதிகளுக்கு முரணாக செயற்படுகின்ற ஒருவர், அரசியல் அரங்கி லிருந்து அகற்றப்படுகின்றார்.

***சிறீலங்கா அரசும், அதன் பங்காளிகளும் சிறீலங்காவின் அரசியலில் செயற்படு கின்ற விதிகளுக்கு முற்றிலும் இசைவாகவே செயற்படுகின்றார்கள். இதன் காரணமாகத் தான் ஒவ்வொரு தேர்தல் களமும், பேரினவாத முழக்கங்களினால் சூடேறித் தகிக் கின்றது, ஒவ்வொரு தேர்தலின் பின்பும், முன்னைவிட கொடூரமாக ஈழத்தமிழர்களும், முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் அடக்கப்படுகிறார்கள், அவர்களின் உரிமைகளும், நலன்களும் வன்மையாக நசுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்தமும் கிழித்தெறியப்படுகின்றது, பெரும் ஆரவாரத்துடன் முன்வைக்கப்படுகின்ற ஒவ்வொரு தீர்வுத் திட்டமும் குப்பைக் கூடைக்குள் வீசப்படுகின்றது. மாபெரும்***

இத்தகைய பின்புலத்தில், சிறீலங்காவின் அரசியலைப் பரிசீலிப்போமாயின், அது இறுகிக் கட்டிபட்டுப்போயுள்ள, சிங்கள, பௌத்த பேரினவாத சித்தாந்தத்தாலும், தனது சொந்த மக்களையே பலி கொடுத் தும், பலி எடுத்தும் வருகின்ற தரகுமுதலா ளித்துவ கழிசடைப் பண்புகளினாலும், உலகை விழுங்கிக் கொண்டிருக்கின்ற ஏகாதிபத்தியத்தின் நலன்களினாலும் தீர்மானிக்கப்படுகின்றது என்ற எதார்த் தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

சிறீலங்கா அரசும், அதன் பங்காளிக ளும் சிறீலங்காவின் அரசியலில் செயற்படு கின்ற விதிகளுக்கு முற்றிலும் இசைவாகவே செயற்படுகின்றார்கள். இதன் காரணமாகத் தான் ஒவ்வொரு தேர்தல் களமும், பேரின வாத முழக்கங்களினால் சூடேறித் தகிக் கின்றது, ஒவ்வொரு தேர்தலின் பின்பும், முன்னைவிட கொடூரமாக ஈழத்தமிழர்களும், முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் அடக்கப்படுகிறார்கள், அவர்களின் உரிமைகளும், நலன்களும் வன்மையாக நசுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்தமும் கிழித்தெறியப்படுகின்றது, பெரும் ஆரவாரத் துடன் முன்வைக்கப்படுகின்ற ஒவ்வொரு தீர்வுத் திட்டமும் குப்பைக் கூடைக்குள் வீசப்படுகின்றது. மாபெரும் 'சமாதானப் புறாக்களாக' உயர்ந்தெழுகின்ற ஒவ்வொரு சிங்களத் தலைவரும், மிக விரை விலேயே அப்பட்டமான பேரினவாதிகளாக தம்மை உரித்துக் காட்டி விடுகிறார்கள், இவர்கள் அவ்வப்போது தம்மை மூடிப் போர்த்திக் கொள்கின்ற முற்போக்கான, ஜனநாயக, மனிதாபிமான திரைகளெல்லாம் கிழித்தெறியப்பட்டு, அவர்களின் அசிங்க மிக்க, கோரத்தனமான பேரினவாத முகங் கள் துலக்கமாக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழீழத்தில் உருவாக்கப்படுகின்ற ஒவ்வொரு சிங்களக் குடியேற்றமும், இராணுவ முகாமும், தமிழ் தேசத்தின் மீது சுமத்தப்படுகின்ற பொருளாதாரத் தடைக ளும், வீசப்படுகின்ற ஒவ்வொரு குண்டும், கலாச்சார ரீதியான ஆக்கிரமிப்புகளும் சிறீலங்காவின் பேரினவாத, ஆக்கிரமிப்பு அரசியலில் செயற்படுகின்ற விதிகளின் கொடிய விளைவுகளே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிறீலங்கா அரசும் அதன் பங்காளிகளும் ஈழத்தமிழர்கள், முஸ்லி ம்கள், மற்றும் மலையகத் தமிழர்களை அடக்கியும் ஆக்கிரமித்தும் செயற்படுவதே விதியாக்கப்பட் டிருக்கின்ற நிலையில், இத்தகைய அடக்குமுறை மற்றும் ஆக்கிர மிப்பிலிருந்து எம்மை விடுவித்துக் கொள் வதற்கு, நாம் செய்ய வேண்டியது என்ன? இது மிகவும் முக்கியமான கேள்வி. இக் கேள்விக்கு நாம் காணக் கூடிய தெளிவான விடையிலும், அதை நடைமுறைச் சாத்திய மாக்குவதிலுமே எமது தேசத்தின் அரசியல் வாழ்வு முழுவதும் தங்கியிருக்கின்றது. சிறீலங்கா அரசானது சிங்கள் பௌத்த பேரினவாத சித்தாந்தத்தால் வழிகாட் டப்படுகிறது. சிறீலங்கா அரசின் ஓர் அங்க மாகிய பாராளுமன்றத்தின் ஆட்சிப் பொறுப்பை யார் வென்று கொள்கிறார்கள் அல்லது யார் வென்று கொள்ளவில்லை என்பது முக்கியமல்ல, அவர்கள் அனை வருமே சிங்கள் பௌத்த பேரினவாத சித் தாந்தத்தால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள், சிறீலங்காவின் ஆளும் பிரிவினர்களும், சுரண்டும் வர்க்கங்களும், தமது இருப்பையும், நலன் களையும் பேணிக் கொள்வதற்கு ஈழத்தமிழர், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் உரிமைகளையும், நலன்க ளையும் பறித்தெடுப்பதை பிரதான வழி முறையாகக் கையாண்டு வருகின்றன, சிங்களத் தேசத்தின் பல்வேறு பிரிவினரும் சிங்கள, பௌத்த பேரினவாத சித்தாந்தத்

( தொடர்ச்சி 7ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் விடுதலையை நோக்கி...

# ஆணாதிக்க அரசியலில் பெண்களின்

சிங்கள பௌத்த பேரினவாத சிறீலங்கா அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டு அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு வரும் ஈழத்தமிழ் தேசத்து மக்களில் சரிபாதியினராக பெண்கள் நாம் இருக்கின்றோம்.

ஈழத்தமிழ் சமூகமானது, நிலப்பிரபுத்துவ கூறுகளை வெளிப்படுத்தும் பிற்போக்குக் கலாச்சாரத்தாலும் ஆணாதிக்கத்தாலும் இறுகிப்போயிருக்கும் சமூகமாகும். இந்த ஆணாதிக்க சமூகத்தால் பெண்களான நாம் இரண்டாம் தரப்பிரஜைகளா கவே இன்று வரை நடாத்தப்பட்டு வருகின்றோம். "குடும்பம்" எனும் சிறிய அலகு முதல் "சமூகம்" எனும் விரிந்த தளம் வரையில் பெண்கள் எமது ஆளுமை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. பெண்கள் நாம் எப்படி வாழ வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்பதை ஆணாதிக்க சமூகமே தீர்மானித்து விடுவதால் எமது காத்திரமான சிந்தனை, செயற்பாடு, ஆளுமை யாவும் ஒரு சட்டகத்திற்குள் அடைக்கப்பட்டுள்ளன. ஓயாத உழைப்பு, சேவகம், ஈற்றில் தியாகம். இதுவே எமக்கு விதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் எமது வரலாற்றை திரும்பிப் பார்ப்போமானால் ஆண்டாண்டு காலமாக எமது தாய்மாரும் சகோதரிகளும் தமக்கென வாழாமல் குடும்பம் எனும் சிறு வட்டத்திற்குள் கட்டுண்டு குடும்பத்திற்காக உழைத்து உழைத்தே மடிந்து போன வரலாற்றையே எம்மால் காணமுடியும்.

பாரம்பரியமாக விவசாயத் தொழிலில் ஈடுபடும் பெண்கள், கூலித் தொழிலில் ஈடுபடும் பெண்கள் மாத்திரமல்ல கல்வி கற்று சமூகத்தில் பொருளாதார ரீதியாக முன்னேறி வரும் பெண்களும் கூட புதிய வடிவிலான ஆணாதிக்க அடக்குமுறைகளை எதிர்கொள்கின்றனர்.

பெண்கள் எத்தகைய தொழிலை தெரிவு செய்ய வேண்டும்? பெண்களது சமூக உழைப்பிற்கு வழங்கப்பட வேண்டிய கூலியின் அளவு என்ன? என்பதை ஆணாதிக்க பொருளாதார அமைப்பு தீர்மானிக்கிறது. இந் நிலையில், பல தடைகளுக்கும், நெருக்கல்களுக்கும் நடுவே சமூக உழைப்பிலீடுபடும் பெண்கள் குறைவான சம்பளத்திற்கு தமது உழைப்புச் சக்தியை இழக்கின்றனர். பெண்களது உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படாது மறுக்கப்பட்டு வருகிறது. அது மாத்திரமின்றி, பெண்கள் குடும்பத்திற்கும் தமது உழைப்பை வழங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், சமூக உழைப்பிலீடுபடும் பெண்கள் இரட்டை வேலைச் சுமையின் அழுத்தத்திற்குள்ளாகி வருகின்றனர். இரட்டைச் சுரண்டலுக்குள்ளாகின்றனர்.

இவ்வாறு, பெண்கள் நாம் எந்த வர்க்கப் பிரிவைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், எந்தத் தொழிலை செய்பவர்களாயிருந்தாலும் எமது உழைப்பு ஆணாதிக்க சமூகத்தாலும் ஆணாதிக்க குடும்ப நிறுவனத்தாலும் சுரண்டப்படுகிறது.

நாம் சார்ந்த ஈழத்தமிழ் சமூகமானது பெண்கள் எமது உழைப்பை சுரண்டுவதுடன் நின்று விடவில்லை. எம் மீது சமூக ரீதியான பல கட்டுப்பாடுகளையும், தடைகளையும் விதித்துள்ளது. சடங்குகள், சம்பிரதாயங்கள், கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் எனும் பெயரில் பல பிற்போக்குத் தனமான ஆணாதிக்க அடக்குமுறைகளையும் எம்மீது திணித்து வருகின்றது. இவற்றை நாம் கேள்விக்குள்ளாக் கினால், மிரினால் எம்மை தூற்றுகிறது, வன்முறையை பிரயோகித்து எம்மை அடக்குகிறது. இன் நிலையில், எமது சகோதரிகள் இந்தச் சமூகத்தின் அச்சுறுத்தல்களையும், அடக்கு முறைகளையும், சுரண்டல்களையும் எதிர்க்காது அவற்றை அப்படியே அனுசரித்துச் செல்ல பழகி விட்டுள் ளனர். இது, எமது அடிமை நிலையை நாமே அங்கீகரித்துச் செல்வதாய் அல்லவா இருக்கும்?

இத்தகையதொரு சமூக அகவாழ்வை அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் எம்மீது சிறீலங்கா அரசினால் ஏவப்படும் அடக்கு முறைகள் பெண்கள் எமது நிலையை மேலும் மேலும் பாதாளத்தை நோக்கித் தள்ளுவதாகவேயிருக்கிறது.

சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பின் விளைவாக எமது தேசத்தின் பொருளாதார வாழ்வு சீர்குலைக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு வருவதானது சமூகரீதியாக பொருளாதாரத்தில் கீழ் நிலையில் இருப்பவர்களான பெண்களான எம்மையே பெரிதும் பாதிக்கிறது. நாமும் எம்மைச் சார்ந்திருக்கும் குழந்தைகளும் வயோதிபர்களும் பட்டினியை அனுபவிக்க நேர்கிறது. குடும்பப் பொருளாதாரத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பவர்களாதலால், குடும்பத்திற்காக தற்போது மேலும் மேலும் கூடுதலாக உழைக்க நேர்கிறது. அதன் மறுபுறம் போஷாக்கின்மையும், நோயும், மனப்பாதிப்புமே எமக்கு கூலியாக கிடைக்கிறது. இந்நிலையில் அகதி முகாம்களில் வாழும் எமது சகோதரிகள் படும் அவலம் சொல்லி மாளாது. சுகாதாரக் கேடு, நோய், பட்டினி கால் நீட்டிப்படுக்கவும், தமது பிரத்தியேக காரியங்களை செய்து கொள்வதற்குமான மறைப்பிடம் கூட இல்லாத துயரவாழ்க்கையை எமது சகோதரிகள் அனுபவிக்கின்றனர்.

சிறீலங்கா அரசானது பேரினவாத அரசு மாத்திரமல்ல அது ஒரு ஆணாதிக்க அரசுமாகும். தமிழீழத்தை இன்று நேரடியாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது சிறீலங்கா அரச படைகளே. அதி பெரும்பான்மை ஆண்களான இந்த சிறீலங்கா கூலிப்பட்டாளங்கள் ஈழத் தமிழ் பெண்களான எம்மை தமது பாலியல் பண்டங்களாக கையாள முனைகின்றன, எம்மீது பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன. எம்மில் எவரையும் எக்கணத்திலும் சிறீலங்கா படைகள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கக் கூடிய பாதுகாப்பற்ற சூழ்நிலையே தமிழீழத்தில் நிலவுகிறது. எதிரிப்படைகளால் எமது சகோதரிகள் கூட்டு வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு கோரமாக கொலை செய்யப்பட்ட சம்பவங்களை நாம் அவ்வளவு எளிதில் மறப்பதற்கில்லை. அச்சம் தரும் இந்தக் கொடூர வாழ்வை ஈழத்தமிழ் பெண்களான நாம் எவ்வளவு காலத்திற்குத்தான் சகித்துக் கொண்டிருக்கப் போகிறோம்.?

சொந்தச் சமூகத்தின் ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கு மாத்திரமல்ல, எதிரியின் ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கும் பெண்கள் நாமே பலியாக நேர்கிறது.

இந்நிலையில் ஈழத்தமிழ் பெண்களான நாம் இரட்டைக் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் இருக்கின்றோம்.

- ஈழத் தமிழ் சமூகத்தின் ஆணாதிக்க அடக்குமுறைகளைத் தகர்த்து பெண் விடுதலைக்கான பௌதீக மற்றும் சித்தாந்த அடித்தளத்தை இடும் சமூகக் கடமை.
- சிறீலங்கா ஆக்கிரமிப்பாளரை எமது தமிழீழ பிரதேசத்திலிருந்து துரத்தியடித்து தேசத்தின் இறைமையை மீட்டெடுக்கும் தேசியக் கடமை.

இவ்விரு கடமைகளுமே சம முக்கியத்துவமுடையனவாகும். பெண்கள் எம்மைப் பொறுத்தவரையில் இதில் ஒன்றை முதன்மைப் படுத்தி இன்னொன்றின் பாத்திரத்தை குறைத்து மதிப்பிடுவது என்பது எமது விடுதலையை பூரணப்படுத்தப் போவதில்லை.

முழுமையான சமூக ஆளுமையுடைய மானுட ஜீவிகளாக நாம் வாழ வேண்டுமானால் சமூக அளவில் எம்மைப் பிணைத்து வைத்திருக்கும் ஆணாதிக்கத்தை தகர்த்திட வேண்டும். ஆணாதிக்கத்தை வேரறுப்பதன் மூலமாக மாத்திரமே பெண்கள் நாம் விடுதலையடைய முடியும்.

எனினும் இன்றைய குறிப்பான வரலாற்றுக் கட்டத்தில் சிறீலங்கா பேரினவாத அரசின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள தேசத்துப் பெண்கள் எனும் வகையில் ஆக்கிரமிப்பாளரை எமது தேசத்துள் உலாவ அனுமதித்துக் கொண்டிருக்கும் வரையில் ஆணாதிக்கத்திற் கெதிராக நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் பூரண வெற்றியைத் தரப் போவதில்லை.

அதே போல், ஆணாதிக்கத்திற்கெதிரான பெண்களது போராட்டத்தை மறந்த தேசவிடுதலைப் போராட்டங்களாலும் பெண்கள் எமக்கு எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை. தேசம் விடுதலையடைந்தாலும் தேசத்தின் சரிபாதி பிரஜைகளான பெண்கள் நாம் தொடர்ந்தும் அடிமைகளாகவே இருக்க நேரிடும்.

"தமது தலைவிதியை தமது சொந் தக் கைகளில் எடுக்காத எந்த மக்கள் பிரிவும் விடுதலையடையப் போவதில்லை" இது பெண்களுக்கும் பொருந்தும். தமது அரசியலை, தமது விடுதலைப் போராட்டத்தை தமது கைகளிலெடுத்துக் கொள்ளாத வரையில் பெண்கள் விடுதலையடையப் போவதில்லை.

தேசிய ரீதியாக மிக மோசமான அடக்கு முறைகளை எதிர்கொள்ளும் சமூகமாக இருந்தாலும் ஈழத்தமிழ் சமூகமானது தனது ஆணாதிக்க அடக்குமுறைகளை தேவைக்கேற்ப பிரயோகிக்கும் வகையில் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கமானது புதுப் புது பரிமாணங்களை எடுக்கவே செய்கிறது.

ஆணாதிக்கத்தின் இந்தப் புதிய பரிமாணங்களை கருத்திற்கெடுக்காது விடுவோமானால் எம்மால் எமது வரலாற்றுக் கடமைகளில் எதையுமே வெற்றிகரமாக நிறைவேற்றிட முடியாது போகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்றுவரை ஆண்களின் கைகளிலேயே உள்ளது. போராடத்திற்கு தலைமை தாங்குபவர்களும் அதன் திசைவழியைத் தீர்மானிப்பவர்களும் ஆண்களாகவே இருக்கின்றனர். சுருங்கக் கூறின் ஈழத்தமிழர் அரசியலானது ஆண்களின் - ஆணாதிக்க அரசியலாகவே உள்ளது. தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் ஆண்களின் அரசியலைப் பலப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனரேயன்றி பெண்களது நலனை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான உரிமைகள் இப் போராட்டக் களத்தில் பெண்களுக்கு மறுக்கப்பட்டே வருகின்றது. இன் நிலையில் நாம் எமது தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கும் தேசிய அரசியலின் திசைவழியைத் தீர்மானிக்கவுமான உரிமையைப் பெறுவதற்கும் கூட போராட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

தேசிய அரசியலில் நாம் சமத்துவமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் போதே, சமூக அளவில் பெண்களின் விடுதலையை பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவதற்கான வாய்ப்புக்களும் வளங்களும் எமக்குக் கிடைக்கப் பெறும். இன்றைய கட்டத்தில் தேசிய அரசியலில் சமத்துவத்தைப் பெறுவதற்கும் கூட ஆணாதிக்கத்திற்கெதிராகப் போராட வேண்டிய நிலையிலேயே நாமுள்ளோம். இத்தகைய இருவழிப் போராட்ட வழிமுறையினூடாக பயணிப்பதன் மூலமே தேச அரசியலில் தலையீடு செய்யவும், தேசத்தின் சரிபாதி பிரஜைகளெனும் வகையில் எமது தேசத்தின் அரசியலை நிர்ணயிப்பதற்கான உரிமையை வென்று கொள்ளவும், பெண் விடுதலைக்கான பொருளாதாய அடித்தளத்தை (Material Base) இடவும் எம்மால் இயலுமானதாகும்.

> "....இலக்குகள் வரையறுக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், இந்த இறுதி இலக்குகளை அடைவதற்கு இட்டுச் செல்லும் படிமுறை, மற்றும் முன்னெடுப்புகள் ஆய்வு செய்யப்பட்டு முன் கூட்டியே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். போராட்டமானது வளர்ச்சி பெற்று செல்லும் போதும் போராட்டத்தில் எதிர்பாராத நிலைமைகள் தோன்றும் போதும், அவற்றுக்கு ஏற்ப இப்படிமுறைகளும் முன்னெடுப்புக்களும் செழுமைப்படுத்தப்படவும், நெகிழ்வுத் தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டியிருக்கும் என்ற போதிலும், மேற்படி படிமுறைகளும் முன்னெடுப்புகளும் திட்டமிடப்பட்டு இருக்க வேண்டியது அவசியமே..."
>
> -சேகுவேரா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலையும் சிறிலங்கா ஆயுதப் படைகளும் !

சிறிலங்கா அரசு அரை நூற்றாண்டு காலமாக, தமிழ் தேசத்தையும் தமிழீழத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இவ்வரசு நமது தேசத்தின் மீது ஈவிரக்கமற்ற யுத்தத்தை கடந்த இரு தசாப்தங்களாக கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அடக்கு முறைகளுக்கும் இன அழித்தொழிற்பிற்கும் பலியாகின்ற ஒவ்வொரு தமிழீழ பிரஜையும், போராட்டத்தில் நேரடியாக களப்பலியாகிய ஒவ்வொரு போராளியும் சிறிலங்கா அரசின் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிராக எமது தேசம் தீரத்துடனும் உறுதியுடனும் போராடிக் கொண்டிருக்கிறது என்பதை உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தேசமாகிய நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஒரு நீதியான போராட்டத்தின் உரிமையாளராகவும், அதனை உறுதியுடன் முன்னெடுப்பவர்களாகவும் நாம் இருப்பதால் எமது வெற்றியை எந்தவொரு சக்தியாலும் தடுத்துவிட முடியாது. இத்தகைய வெற்றியை நாம் முழுமையாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை சாத்தியமாக்க வேண்டுமாயின் எமது போராட் டமானது பண்பு ரீதியான மாற்றத்தை பெற்றாக வேண்டும். அதாவது எமது போராட்டம் வெகுஜனப் பண்பை பெற வேண்டும், பலமான அரசியல் இயக்கத் துடன் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். தீவிரமான சர்வதேச கவனத்தை பெற வேண்டும். அதேசமயம் இது ஆயுதப் போராட்ட வழிமுறையுடன் திட்டமிட்ட ரீதியிலும் தொடர்ச்சியாகவும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

இக்கட்டுரையில், நாம் சிறிலங்கா அரசை ஆயுதமுனையில் வெற்றி கொள்ள வேண்டி யதன் அவசியம் குறித்து பரிசீலிக்கின்றோம். ஒரு அரசு பிற தேசத்தை ஆக்கிரமிப்பது என்பது வெவ்வேறு வழிமுறைக ளுக்கூடாக நடந்தேறக் கூடும். அதாவது ஒரு அரசு தனது ஆயுதப் படைகளைப் பய ன்படுத்தி, இன்னொரு தேசத்தை நேரடி யாக ஆக்கிரமிக்கலாம், அல்லது ஒரு தேச த்தின் ஆளும் பிரிவினர்களைக் கட்டுப்படுத்தியோ, அவர்களுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியோ, அவர்களுக்கு ஆயுத ரீதியா கவும், பொருளாதாரரீதியா கவும் உதவி களை வழங்கியோ, அங்கு தனக்கு சாதக மான விதத்தில், அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி தனது ஆக்கிரமிப்பை மறைமுகமாக நிலைநாட்டலாம். சிறீலங்கா அரசை சப் பொறுத்தவரை, அது தமிழ் தேசத்தின் மீது அப்பட்டமான, கொடுரமான, ஆயுத ரீதியான ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருக் கின்றது. சிறீலங்கா அரசின் இத்தகைய ஆக்கிரமிப்பிற்கு, அதன் படைகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி, அதை வெற்றி கரமாக நிறைவேற்றி வருகின்றன. சுருக்க மாக கூறுவோமாயின், சிறீலங்கா அரசு, தமிழ் தேசத்தை ஆக்கிரமிப்பதற்கு உதவி வருகின்ற அடிப்படைக் கருவியாக சிறீலங்கா அரச படைகளே விளங்குகின்றன.

சிறீலங்கா அரசும் அதன் ஆளும் குழும மும், தமது அரசியல், பொருளாதாய ஆதி க்கத்தையும், நலன்களையும் தொடர்ச் சியாக தக்கவைப்பதற்கும், பெருக்கிக் கொள்வதற்கும், சிங்கள மக்களை தொடர் ந்தும் தமது சித்தாந்த ஆதிக்கத்தினுள் கட்டுப்படுத்தி வைப்பதற்கும் ஈழத்தமிழர்கள் (மற்றும் முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள்) மீது தமது முற்றான ஆதிக் கத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். சிறீலங்கா அரசின் இத் தகைய ஆதிக்கத்திற்கு எதிராக, குறிப் பாக தமிழ் மக்கள் ஏற்கனவே கிளர்ந்தெ ழுந்து போராடிக் கொண்டிருக்கின்ற நிலை யில், தமிழ் தேசத்தை ஆயுதரீதியாக அடக்கி வைப்பது ஒன்றே, சிறீலங்கா அரசி ற்கும், அதன் ஆளும் குழுமத்திற்கும் முன் னுள்ள ஒரே தெரிவாக அமைந்திருக்கின்றது. இதன் காரணமாக சிறீலங்கா அரசு தனது படைகளை குறுகிய காலத்தில் மிகப்பிரமாண்டமான அளவில் வளர்த் திருக்கின்றது. ஆள் எண்ணிக்கையில் மாத்திர மின்றி, ஆயுதங்களின் அளவு மற்றும் தன்மையிலும் சிறீலங்கா படைகள் தீவிர வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன.

சிறீலங்கா அரசில் ஆக்கிரமிப்பு வெறியும், யுத்த முனைப்பும் மேலோங்கி இருப்பதன் விளைவாக, ஆயுதப்படைகளின் செல்வா க்கு அந்த அரசில் அபரிதமாக உயர்ந்து விட்டது. தேர்தலில் வெற்றி பெறுகின்ற ஒவ் வொரு அரசாங்கமும் ஆயுதப் படைகளின் ஆதரவிலும், தயவிலும் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்தேசம் தொடர்பாக சிறீலங்கா அரசாங்கங்கள் மேற்கொள்கின்ற எந்தவொரு முடிவும் இறுதியில், ஆயுதப்படை களினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய நிலைமை உருவாக்கி இருக்கின்றது. தமிழீழத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை திட்டமிடவோ, மாற்றவோ அல்லது நிராகரிக்கவோ கூடிய அதிகா ரத்தை சிறீலங்கா படை அதிகாரிகள் பெற்றிருக்கிறார்கள். மக்களின் வரிப்ப ணத்தில் ஊதிப்பெருத்தும், ஊழல், மோசடி என்பவற்றின் மூலமாக செல்வம் திரட்டியும் வருகின்ற சிறீலங்கா படை அதிகாரிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ், அவர்களின் வழிகாட்டலின் படியே தமிழீழத்தின் மீதான சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு யுத்தம் இன்று முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிறீலங்கா அரசாங்கங்ளினால் முன்வைக்கப்படுகின்ற, ஏமாற்றுத்தனமான "தீர்வுத் திட்டங்களை" கூட கேவலமாக உதாசீனப்படுததி விட்டு, அனுருத்த போன்ற யுத்த வெறியர்கள் தமிழ் மக்கள் மீது கொடுர யுத்தத்தை மேற்கொள்ள முடிந்திருப்பதற்கு, ஆயுதப்படைகளின் பூரண ஆதரவை அவர்கள் பெற்றிருப்பதே ஒரே காரணம்.

இத்தகைய அரசியல் பின்புலத்தில் எமது விடுதலை என்பது, இறுதியில் சிறீலங்கா படைகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்வதன் மூலமாக மட்டுமே சாத்தியமாகக் கூடிய நிலைக்கு மாறியிருக்கின்றது. தமிழீழமெங்கும் சிறீலங்கா படைகள் தனது யுத்தக் கருவிகளின்ால் கிழித்துக் குதறிக் கொண்டும், குண்டுமாரி பொழிந்தும் கொண்டிருக்கின்ற நிலையில் அப்படைகளை தமிழீழத்தில் இயங்க அனுமதித்து விட்டு தமிழ் தேசம் தனது விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாராவது நம்பினால், அதைப் போன்ற அரசியல் அறிவீனம், கோமாளித் தனம் வேறு ஏதும் இருக்க முடியாது. இவ்வாறான ஒரு அரசியல் சூழலில், சிறீலங்காப் படைகளை நாம் வெற்றி கொள்ள வேண்டுமாயின், முதலில் இப்படைகள் குறித்து தெளிவானதும் சரியானதுமான மதிப்பீட்டைக் கொண்டிருப்பது அவசியம், மாறாக, இப்படைகள் குறித்து நாம் சிறிதளவேனும் தவறான மதிப்பீட்டை கொண்டிருப்போமாயின், இதன் விளைவாக ஈற்றில் நாம் என்றென்றைக்கும் சிறீலங்கா அரசின் அடிமைகளாக மாறக் கூடியநிலை உருவாகிவிடும்.

சிறீலங்கா அரசுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள், தமிழ்புத்திஜீவிகள், மனிதஉரிமை அமைப்புக்களில் செயற்படுகின்றவர்கள். போன்றோர், தற்போது சிறீலங்கா படைகளின் நடவடிக்கைகளில் காணப்படுகின்ற "முன்னேற்றங்கள்" குறித்தும் மனிதாபிமானப் பண்புகள் குறித்தும் அடிக்கடி சிலாகித்துப் பேசி வருகின்றனர். மேலும் இவர்கள், சிறீலங்கா படைகளில் இணைகின்றவர்களின் வறுமை, வேலையில்லா நிலைமை என்பவை குறித்தும் ஆழ்ந்த அனுதாபத்தோடு அக்கறை கொள்கிறார்கள். இவை முற்றிலும் தவறான கருத்துக்கள். இவற்றை திரும்பத் திரும்ப பேசுவதன் மூலமாக. தமிழ் மக்கள் மத்தியில், சிறீலங்காப் படைகள் குறித்த ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்த இந்த தமிழ் அரசியல் கைக்கூலிகள் திட்டமிட்ட ரீதியில் முயற்சித்து வருகின்றார்கள்.

வேலையில்லாப் பிரச்சனை என்பது, சிங்கள மக்களுக்கு மட்டுமின்றி, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களுக்கும் உள்ள ஒரு பொதுவான பிரச்சனையே அதிலும், குறிப்பாக சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக கடைப்பிடித்து வருகின்ற பேரினவாதக் கொள்கைகள் காரணமாக, ஈழத்தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் வேலையில்லா நிலைமை என்பது மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது. ஒரு எளிமையான உதாரணமாக, "14000 சிங் கள மொழி மூல ஆசிரியர்கள் மேலதிக மாக இருக்கின்ற அதே நேரத்தில், 10000 தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது" என்ற உலக வங்கியின் அண்மைய அறிக்கையை குறிப் பிட முடியும். இவ்வாறிருந்தும் சிங்கள இளைஞர்கள்/யுவதிகள் மட்டுமே ஆயுதப் படைகளில் இணைக்கப்படுகின்றார்கள். இந்த உண்மை யானது, ஆயுதப்படைகளில் இணைவதில், வேலையில்லா நிலை காரணம் என்பதை விட மேலும் பல காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகி ன்றது.

முதலாவதாக சிறீலங்கா படைகளுக்கு ஆட்சேர்த்தல் என்பது, தமிழ் தேசத்தின் மீதான சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கின்றது. சிறீலங்கா அரசு எவ்வளவு தீவிரமாக, தொடர்ச்சியாக தமிழ் தேசத்தின் மீது யுத்தத்தை முன்னெடுக்கின்றதோ, அவ்வளவு அதிகமாக அது தனது படைகளுக்கு புதிய ஆட்களைச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றது. தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரமாக தொடங்குவதற்கு, தனக்கு முற்றிலும் விசுவாசமாக செயற்பட்டு யுத்தத்தில் உணர்வுபூர்வமாகப் பங்கு கொள்கின்றவர்களே சிறீலங்கா அரசிற்கு தேவைப் படுகிறார்கள். சுருங்கச் சொன்னால், சிறீலங்கா அரசிற்கு தேவைப்படுவது எல்லாம் தனது ஆக்கிரமிப்புக்குத் துணையாகக் கூடிய தூய சிங்கள இனப் படைகளே.

இரண்டாவதாக, ஒரு சிங்கள நபர் ஆயுதப்படையில் இணைவதில், சிங்கள மக்கள் மத்தியில் ஆழவேரூன்றியுள்ள சிங்கள பெளத்த பேரினவாத சித்தாந்தம் பிரதான ஊக்கியாகச் செற்படுகின்றது. ஒரு புறம் இந்த சித்தாந்தம், "முழுத் தீவும் சிங்கள பௌ த்தர்களுக்கு சொந்தமானது என்றும், இங்கு வாழுகின்ற ஏனைய சமூகங்கள் வந்தேறு குடிகளே" என்றும் உரிமை பாராட்டுகின்றது. மறுபுறம், "இங்குள்ள ஏனைய சமூகங்கள், சிங் கள பெளத்தர்களை மோசமாக சுரண்டுகிறார்கள் என்றும், சிங்கள மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை இந்நாட்டிலிருந்தே விரட்டியடிப்பதற்கு திட்டமிட்டு செயற்படுகின்றார்கள்" என்றும் கடுமையான பகைமையையும், அச்சத் தையும் சிங்கள மக்களிடையே ஓயாது பரப்பி வருகின்றது. இவ்வாறு ஒன்றுக் கொன்று முரண்பட்ட இருவகைக் கருத்துக் களினாலும் பீடிக்கப் படுகின்ற ஒரு சிங்கள் இளைஞர்/யுவதி, தனது இனத்தின் உரிமையையும், இருப் பையும் பாதுகாப்பது தனது கடமை என்றும், அதற்காக "தமிழ் பயங்கரவாதத்தை" முறியடித்து தமிழ் மக்களை சிறீலங்கா அரசின் ஆதிக்கத் திற்குள் கொண்டுவர வேண்டும் என்றும் உறுதி பூண்டவர்களாக ஆயுதப் படையில் கணிசமாக இணைகிறார்கள்.

மூன்றாவதாக, ஆயுதப்படையில் இணைவதன் மூலமாக, ஒரு சிங்கள நபரின் சமூக படி நிலையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் இங்கு முக்கிய கவனத்திற்குரியது. தமிழீழத்தின் இன்றைய யுத்த சூழலில், ஆயுதப்படையைச் சேர்ந்த ஒருவருக்குள்ள அதிகாரம் வரம்பற்றது. இதுவரை காலம் தனது சொந்த பிரதேசத்தில், யாருடைய கவனத்திற்கும், மரியாதைக்கும் உட்படாத ஒருசராசரி பிறவியாக இருந்த ஒரு சிங்கள நபர், ஆயதப்படையில் இணைவதன் மூல மாக, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழரின் அச்சம் கலந்த மரியாதையை பெற முடிகின்றது. அதே நேரம் சிங்கள மக்கள் மத்தியில் இவர் ஒரு தேசிய வீரராக மதிக் கப்பட்டு, அவர்களின் அனுதாபத்தையும், ஆசீர்வாதத்தையும் பெறுகிறார். பிரயாணத்தின் போதும், நிர்வாக அலுவல்களிலும், சமூக நல விவகாரங்களிலும் இவருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இவை அனைத்தும் உடனடியாகவே அவரை அதிகாரமிக்கவராக மாற்றி விடுகிறது. அதிகா ரப்படிநிலை முறை மிகவும் இறுக்கமாக நிலவுகின்ற ஒரு சூழலில், ஒவ்வொருவரும் தன்னை அதிகாரம் மிக்கவர்களாக மாற்றிக் கொள் ளவே விரும்புகின்ற சூழலில், ஒரு சிங்கள நபர் ஆயுதப்படையில் இணைவதில், அதிகாரப் படிநிலை ஒழுங்கில் அவருக்கு கிடைக்கின்ற உயர் நிலையும் ஒரு முக்கிய காரணியாகின்றது.

நான்காவதாக, ஒரு சிங்கள இளைஞர்/யுவதி ஆயுதப்படையில் இணைவதில், அவருக்கு கிடைக்கின்ற பொருளாயத நலன்களுக்கு குறிப்பான பாத்திரம் இருக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்றது. உயர்ந்த சம்பளம், இலவச காணி, வீடுகட்டுவதற்கான உதவிகள், உணவு உடை என்பவற்றுக்கான மானியம் போன்றவை ஒருவரை ஆயுதப்படையில் இணைக்கின்ற கவர்ச்சி மிக்க சாதனங்களாக விளங்குகின்றன. அரசாங்க/தனியார் துறைகளில் வேலை செய்கின்ற ஒரு சராசரி ஊழியருக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தைவிட, ஆயுதப்படையில் உள்ள சாதாரண படையாளருக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் மிக மிக அதிகமானது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றோடு ஆயுதப்படைகளில் இணைகின்றவர்களில் மிகப்பெரும்பான்மையானோர்கள் ஆண்கள் (இளைஞர்கள்) என்பதை கவனத்தில் கொள்வோமாயின், இவர் எது பாலியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள் ளது. ஒரு புறம் தமிழீழத்தின் யுத்தசூழலில், ஆயுதங் களையும், அதிகாரங்களையும் சுமந்து கொண்டு திரிகின்ற அரசபடையினர் தமிழ் பெண்கள் மீது வன்புணர்ச்சி மேற்கொள்வது எளிதாகவும், மிக அடிக்கடியும் சாத்திய மாகின்றது. மறுபுறம் தமக்கு ஏற்படுகின்ற பாலியல் தேவைகளை தணிப்பதற்கான வாய்ப்புகள் இவர்களுக்கு இலகுவாக கிடைக்கின்றன. அனுராதபுரம், தம்புள்ள போன்ற இராணுவத் தரிப்பிடங்களில் ஆயுதப்படையினரின் பாலியல் தேவைகளை தணிப்பதற்காக, பாலியல் தொழிலில் (Sexual Labour) ஈடுபடுகின்ற, நூற்றுக் கணக்கான பெண்கள் தோன்றியிருக்கின்றார்கள் என்ற உண்மையின் மூலம், ஆயுதப் படையில் இணையும்படி ஒரு சிங்கள இளைஞரைத் தூண்டுவதில், தமது பாலியல் தேவைகளைத்தீர்ப்ப தற்குக் கிடைக்கின்ற இத்தகைய வாய்ப்புக்கள் வகிக்கின்ற பாத்திரத்தை புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு ஒரு சிங்கள இளைஞர்/யுவதி ஆயுதப்படையில் இணைவதில் பல காரணிகள் தூண்டுகோலாக அமைகின்றன. இவற்றின் அடித்தளமாக சிங்கள-பௌத்த பேரினவாத உணர்வுகளும், தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்பு மனோபாவமும் அமைந் திருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். **சிறீலங்கா படைகள் சராம்சத்தில் ஆக்கிரமிப்புப் படைகள்** என்ற உண்மையை நாம் எப்போதும் மறந்து விடக் கூடாது. எந்தவொரு ஆக்கிரமிப்புப் படையும் தான் ஆக்கிரமித்த மக்களின் உரிமைகள், நலன்கள் என்பவற்றை தாமாகவே முன் வந்து வழங்கியதாக வரலாறு எதுவுமேயில்லை. ஒரு ஆக்கிரமிப்பு படையைச் சேர்ந்த சில தனிநபர்களின் "மனிதாபிமான" பண்புகள், அந்த படையின் ஆக்கிரமிப்புப் பண்பை ஒரு போதும் குறைக்கவோ, மாற் றோவோ மாட்டாது. இத்தகைய நபர்கள் தனிப்பட்ட ரீதியில் உயர் மனிதாபிமானப் பண்புடையவர்களாகக் கூட இருக்கலாம், ஆனால் இத்தகைய ஒரு சில விதிவிலக்கான நபர்களின் விருப்பத்திற்கேற்ப ஆயுதப் படைகளின் பண்பு தீர்மானிக்கப்படுவ தில்லை. அதிலும் உக்கிரமான யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழலில், இத்தகைய தனி நபர்கள் எத்தகைய முக்கியத்துவமும் அற்றவர்களாகின்றார்கள். இந்த உண்மை எம்மை ஆக்கிரமித்த இந்தியப் படைக்கு மட் டுமல்ல, இன்று ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா படைகளுக்கும் முற்றிலும் பொருந்தக் கூடியதே.

சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு, அதன் படைகள் பூரண ஆதரவை வழங்கி, அவற்றை "வெற்றிகரமாக" நிறைவேற்றி வருகின்றன. தமிழீழத்தில் மேற்கொள்கின்ற ஒவ்வொரு சிங்களக் குடியேற்றத்தையும் அரசபடை களே முன்னின்று நடத்துகின்றன., அத்த கைய குடியேற்றங்களுக்கான முழுப்பாது காப்பையும் அப்படைகளே வழங்குகின்றன. தமிழ் தேசத்தின் ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் சிறீலங்கா படைகள் துப்பாக்கி முனையில் பறித்து வருகின்றன. தமிழ்தேசமானது ஒவ்வொரு கணமும் தனது நிலம் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை தடுக்க முடியாமல் இருப்பதற்கும், தமது அடிப்படை உரிமைகளுக்காக **முற்றிலும் ஜனநாயக வழியில் கூட** போராட முடியாமல் இருப்பதற்கும் இந்த ஈவிரக்கமற்ற, கொலைகார சிறீலங்கா அரசுப் படைகளே காரணமாக இருக்கின்றன. போராட்ட அமைப்புகளினால் அல்லது சிறீலங்கா படைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும், எத்தனை அப்பாவி தமிழ் மக்களை இந்த மிருகத்தனமான, சிங்கள மயமான ஆயுதப்படைகள் கொன்று குவிக்கின்றன! எத்தனை தமிழ் பெண்களை வன்புணர்ச்சிக்குட்படுத்தியிருக்கின்றன! எத்தனை அப்பாவிகள் இப்படையினரால் அங்கவீனர்களாக்கப்பட்டிருக்கிறார்கள்! எத்தனை வீடுகள், இருப்பிடங்கள், வணக்கத்தலங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன! தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன!!

இத்தகைய கொடிய அரசுப்படைகள் தமிழீழத்தில் இராணுவரீதியிலான அடக்கு முறைகளில் மட்டும் பங்கு கொள்ளவில்லை. கூடவே தமிழீழத்தின் முழு சிவில் நிர்வாகத்தையும் அவை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் பொறுப்பான இராணுவத் தளபதியின் அனு மதியின்றி அங்கு எந்தவொரு நிர்வாக அலுவல்களும் இடம் பெற முடி யாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி அமைப்புக்களும், அரசியல் வாதிகளும் மக்களின் நலன்களுக்கேற்ப செயற்படக் கூட, இராணுவ அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. ஒரு அரசாங்க ஊழியரின் இடமாற்றத்தில் கூட, ஆயுதப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் தலையீடு செய்யக் கூடியளவிற்கு, தமிழீழத்தின் சிவில் வாழ் க்கை மாற்றப்பட்டிருக்கின்றது. இவ்வாறு தமிழீழத்தை இராணுவ ரீதியாகவும், நிர்வ ாக ரீதியாகவும் ஆக்கிர மித்திருக்கின்ற சிறீலங்கா படைகளை தமிழீழத்தில் இருந்து முற்றாக துடைத்தெறி யாதவரை, தமிழ் தேசம் தனது விடுத லையை சாதிக்க முடியாது.

சிறீலங்கா படைகள் குறித்து ஈழத் தமிழர் மத்தியில் பரப்பப்படுகின்ற இன்னொரு தவறான கருத்து, இராணுவத்தை விட்டு வெளியேறுபவர்கள் பற்றிய விடயமாகும். சிங்கள இராணுவத்தினர் ஆயிரக் கணக்கில் வெளியேறிச் செல்வதன் காரணமாக, சிறீலங்கா இராணுவம் பலவீனமான நிலையை அடைந்திருக்கின்றது என்றும், எனவே யுத்தத்தை தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டி ருக்கின்றது என்றும், இதையும் மீறி சிறீலங்கா அரசு யுத்தத்தை தொடருமாயின், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் ஆதரவை இழந்து, யுத்தத்தில் தோல்வியை சந்திக்கும் நிலை உருவாகும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கிய அம்சம், இராணுவத்தில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறியிருக்கிறார்கள் என்பது அல்ல, மாறாக இவ்வாறு வெளியேறியும் கூட, **சிறீலங்கா இராணுவத்தின் சிங்களமய தன்மையும், அதன் பேரினவாத, ஆக்கிரமிப்பு மனோபாவமும் சிறிதும் குறையவில்லை என்பதே**. இராணுவத்தில் ஆட்கள் இணைவதும், வெளியேறுவதும் அவர்களின் தனிப் பட்ட விருப்பு சார்ந்த விடயம் மட்டுமல்ல, கூடவே புறச் சூழல்கள் இங்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. 1994 தேர்தல்களில் "மாபெரும் சமாதானக்" கோஷத்தை முன்வைத்து பிரமாண்டமான வெற்றியைப் பெற்ற இன் றைய சிறீலங்கா அரசின் முப்படைத் தலைவர், தனது வெற்றியின் பின் "சமாதானத் திற்கான யுத்தத்தை" முன்னெப்போதையும் விட, தீவிரமாக முன்னெடுக்க முடிந்திருப் பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 94 இல் சிங்கள் மக்களிடையே எழுந்த சமா தான அலையும், யுத்தத்திற்கு எதிரான மனோபாவமும், யுத்தம் அடியோடு அகன்று விடும் என்ற எதிர்பார்ப்பை, நம்பிக்கையை அனைவரிடமும் ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இவையனைத்தையும், ஒரே இரவி ற்குள் மாற்றமடைந்ததோடு, முன்னைவிட உக்கிரமான முறையில் யுத்தத்தை முன்னெடுப்-

> **“சிறீலங்கா படைகள் சராம்சத்தில் ஆக்கிரமிப்புப் படைகள்** என்ற உண்மையை நாம் எப்போதும் மறந்து விடக் கூடாது.”

பதற்கும் அதே "சமாதானப் புறாவினால்" சாத்தியமாகியுள்ளதை நாம் மறந்து விடக் கூடாது. சிங்கள குக்கிராமங்கள் ஊடாக "சமாதான ஊர்தி" இழுத்துச் செல்லப்படுவதற்கு காரணம், சிங் கள மக்கள் மத் தியில் சமாதான விதைகளை ஆழ விதைப்ப தற்கு **அல்ல.** மாறாக, அரசாங்கத் திற்கும், ஆயுதப்படைகளுக்கும் ஆசிபெறவும், சிங்கள பேரினவாத உணர்வுகளை மேலும் ஆழமாக நிலை நாட்டவும், **யுத்தத்தை வெகுஜனமயப்படுத்தவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை விரைவில் நசுக்கி விடுவதற்கு தேவையான போதிய ஆட்களை திரட்டவுமே** என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண் டும். எனவே நேற்றைய சூழலில் இராணு வத்தினர்கள் வெளியேறினார்கள் என்றால், நாளை இன்னுமொரு வேறுபட்ட சூழல் உருவாகும் போது, ஆயுதப்படைகளில் இணை வதற்கு ஆயிரக்கணக்கில் சிங்கள் இளைஞர்கள்/ யுவதிகள் **முன்வருவார்கள்** என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெற்றிருக்கின்ற சிறீலங்கா அரசு, நவீன ஆயுதங்களைக் கொண்டும், இராணுவ ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் மூலமும் இத்தகைய வெளியேற்றத்தை ஈடுசெய்யக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது. எனவே இராணுவத்தினர் வெளியேறு வதை, சிறீலங்கா படைகளுக்கு ஏற்படு கின்ற பலவீனம் எனக் கருதி செயற்படுவோமாயின், சிறீலங்கா அரசிற்கு எதிரான போராட்டத் தில் எமது இறுதி வெற்றி என்பது பொய்த்து விடக்கூடிய நிலை உருவாகும் என்பதை நாம் பிரக்ஞைபூர்வமாக புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் நீடித்துச் செல்வதன் விளைவாக, சிறீலங்கா அரசு ஆட்பலத்திலும், பொருளாதார ரீதியிலும், சர்வதேச மட்டத் திலும் பலவீனமடைந்து செல்கின்றது என் பது உண்மையா? இவற்றின் காரணமாக யுத்தத்தை தொடர்ந்து நடத்துவது சிறீலங்கா அரசிற்கு பாதகமாக அமைந்து விடும் என்ற கூற்றில் உண்மையுண்டா? எதார்த்த நிலைமைகள் இவற்றிற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றன. சிறீலங்கா படைகள் எண்ணிக்கையிலும், ஆயுதங்களின் அளவு மற்றும் தன்மையிலும் தனது நிலையை தொடர்ச்சியாக தக்கவைத்தே வந்திருக் கின்றது, இப்படைகளால் ஆக்கிரமிக்கப் படுகின்ற தமிழீழ பிரதேசங்களின் பரப்பும் தொடர்ச்சியாக **அதிகரித்தே** வருகின்றது, UNP இன் யுத்தமுனைப்பினால் நாடு சீரழிந்து கொண் டிருக்கிறது என்ற "சமாதானக்" கோஷத் துடன் ஆட்சியைக் கைப்பற்றிய இன்றைய PA அரசாங்கம், UNPயை விட மிக உக்கிரமாகவும், மிக கூடிய செலவீனங்களோடும் யுத்தத்தை தொடரக்கூடிய ஆற்றலை வெளிப்படுத் தியிருக்கின்றது, முன்னைய அரசாங்கத் தைவிட இன்றைய அரசாங்கம் சர்வதேச ரீதியில் "நற்பெயரை" சம்பாதித் துள்ளது. தமிழீழத்தில் ஒரு சுதந்திர அரசு அமைவதை சர்வதேச பிற்போக்கு சக்திகள் அறவே விரும்பவில்லை என்பதையும், அவ் வாறு ஒரு அரசு அமைவதற்கு எதிராக, இப்பிற்போக்கு சக்திகள் **ஏற்கனவே** செயற் பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையையும் கவனத்தில் கொள்வோமாயின், இப்பிற்போக்கு சக்திகள், சிறீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் தீவிரமான ஆதரவை வழங்கும் என்ற முடிவை நாம் பெற முடியும். இந்த உண்மைகள் அனைத் துமே யுத்தம் நீடிக்கப்படுவதன் காரணமாக, **சிறீலங்கா அரசு பலவீனப்படவில்லை, மாறாக அது மேலும் பலப்படுகின்றது** என்பதை தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

ஆனால் யுத்தம் நீடிப்பதன் காரணமாக தமிழ்தேசம் மிக கடினமாக பாதிக்கப்பட்டு வருகின்றது. எமது உயிர்கள், பொருளா தாரம், வாழிடம், வளங்கள்.. போன்ற அனைத்தும் ஒவ்வொரு கணமும் அழிக்கப் படுகின்றன, எமது தாயகம் மேலும் மேலும் சிறீலங்கா அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது, பறிக்கப்பட்டு வருகிறது, சிங் களமயமாக்கப்பட்டு வருகின்றது, இவற் றினூடாக எமது தேச இருப்பே கருவறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. **யுத்தத்தின் நீடிப்பு சிறீலங்கா அரசை அல்ல, மாறாக தமிழ் தேசத்தையே சிதைத்துக் கொண்டிருக்கின்றது** என்ற உண்மை எமது சிந்த னையில், உணர்வுகளில் உரத்து அறையப்பட வேண்டும்.

இத்தகைய தேச அழிவு நிலையிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண் டுமாயின், சிறீலங்கா அரசிற்கு எதிரான எமது யுத்தம் விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்! ஆம், **நாம் சிறீலங்கா படைகளின் மீது உறுதியான, தீர்க்கமான வெற்றியை பெற வேண்டும்!** எமது தாயக த்தில் இருந்து சிறீலங்கா படைகளை முற்றாகத் துடைத்தெறிய வேண்டும்! எம்மை ஆக்கிரமிக்கவும், அடிமைப்படுத்தவும், தனது படைகளை ஏவி விட்டிருக்கின்ற சிறீ லங்கா அரசின் பிடியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதற்கு, இதைவிட வேறு மார்க்கம் எதுவும் எமக்கு முன்னே இல்லை. சிறீலங்கா படைகளுக்கு எதிராகப் போராடுவதே, எம்முன்னுள்ள ஒரே தெரிவாக இருக்கின்றது. தமிழீழ விடுதலை என்ற மாபெரும் இலட்சியத்தை எம் உணர்வுக ளுடன் இரண்டறக் கலப்பதன் மூலம், சிறீலங்கா படைகளை வெளியேற்றுகின்ற போராட்டத்தில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்! அதுவும் விரைவாகவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம் சாதாரண மனிதர்களிலிருந்து எந்த வகையில்

நம் தேசத்திற்குள் நிலவும் பல்வேறு முக்கிய அடக்குமுறைகளுள் நம் மீதான சாதிய அடக்குமுறையும் ஒன்று என்பது அனைவரும் அறிந்ததே. சாதிய அடக்குமுறைக்கு நீண்ட கால வரலாறு உண்டு. இது குறிப்பாக தென்னாசிய சமூகங்களில் மிகவும் இறுக்கமாகவும் கறாறாகவும் பின்பற்றப் பட்டுவருகின்றது. வரலாற்றுப் போக்கில் சமூக ஆதிக்க சக்திகளால் சாதியப்பிரிவுகள், சாதிய அடக்குமுறைகள், தீண்டாமை, சாதிய சித்தாந்தம் என்பன உருவாக்கப்பட்டதிலிருந்து எம்மீதான இந்த அடக்குமுறை தோற்றம் பெறுகின்றது. வரலாற்றாசிரியர்களிடையே இது இயற்கையானதல்ல மனிதர்களால் உருவாக்கப் பட்டது என்பது தொடர்பாக உறுதியான முடிவுகள் இருந்தபோதும் இத் தோற்றத்திற்கான காரணங்களில் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபடுகின்றனர். சாதியின் தொடக்க மூலம் பிறப்பினடிப் படையில் நிலவவுமில்லை அப்படி உருவாக்கப்படவுமில்லை. காலோட்டத்தில் ஆதிக்க சாதி கள் தமது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைநாட்டுவதற்கு ஏற்ப சாதியை பிறப்பினடிப்படையில் தீர்மானித்தனர். இச் சாதிய அடக்குமுறையில் பிற அடக்குமுறைகளில் இல்லாத மிகவும் மோசமான தன்மை அதன் தீண்டாமை எனும் அம்சமாகும். இந்த அம்சம் தென்னாசிய சமூகங்களில் மிகவும் மோசமான அளவில் நிலவுகின்றது. இது சாதியால் அடக்கப்பட்ட எங்களை அடக்குவதற்கும் மேலாக இழிவுபடுத்துகின்றது. மிகவும் துரதிர்ஸ்டம் என்னவென்றால் இதை நாம் இயல்பானது என ஏற்றுக்கொள்ளுமளவுக்கு ஆதிக்க சாதிய சித்தாந்தம் தொழிற்படுகின்றது. இந்த அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராடுவது நமது உரிமை என நாம் சிந்திப்பதைக் கூட இந்த ஆதிக்க சித்தாந்தம் மழுங்கடித்துள்ளது. மற்றும் சாதியால் அடக்கப்படும் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆதிக்க சாதிகளுக்கு எதிராகப் போராடாதபடி எங்களுக்கிடையில் அதிகாரப் படிமுறையை உருவாக்கியுள்ளனர். இதன் விளைவு அதிகாரப்படி நிலையில் இடையில் உள்ள அடக்கப்படும் சாதிகள் அதிகாரப்படி நிலையில் தமக்கு கீழ் உள்ள எம்மைப் போன்ற சாதிகளை அடக்குவதன் மூலம் அவர்களும் அடக்கும் சாதிகளாக ஒரு நிலையில் செயற்படுகின்றனர். ஒருபுறம் தாம் அடக்குவோர்களாக இருப்பதில் பெருமை கொள்ளும் அவர்கள் மறுபுறம் தம் மீதான அடக்குமுறைக்கு எதிராக மட்டும் பிரக்ஞைபூர்வமாக செயற்படுகின்றனர். இது சாதிய சமூகங்களில் நிலவும் ஒரு முரண்நகையாகும்.

இக் கட்டுரையின் நோக்கம் சாதியம் தொடர்பாக ஆழமாக ஆராய்வதல்ல. அதற்கான தளம் இதுவல்ல. அப்பணி வேறு தளத்தில் முன்னெடுக்கப்படவேண்டும். **எமது அக்கறை எல்லாம் உருவாகப்போகும் தமிழீழத்தில் சாதிய அடக்குமுறையை இல்லாமல் செய்வதற்காக எமது தேசத்திலிருந்து இதை நீக்குவதற்காக அல்லது அழிப்பதற்காகப் போராடுவதே**. அதாவது அடக்கப்படும் அனைத்து மக்களினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்கப்படுவதை நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதிசெய்து கொள்வது நமது பிரதான கடமையாகும்.

"இப்பதான் சாதியப் பிரச்சனைகள் ஒன்றுமில்லையே. ஏன் இல்லாத ஒன்றைப் போட்டு சும்மா கிளறுகின்றீர்கள்."

"அவர்கள் எங்கள் வீடுகளுக்கு வருகின்றனர். ஒன்றாகச் சாப்பிடுகின்றோம். ஒன்றாகத் திரிகின்றோம். இதைவிட வேறு என்ன வேண்டும்"

"அவர்கள் நாங்கள் செய்கின்ற வேலைகள் எல்லாம் செய்கின்றனர்"

இப்படி ஆதிக்க சாதிகளின் குரல்கள் பலமுனைகளில் இருந்தும் பலவாறும் பலவீனமாக ஒலிக்கின்றன.

இந்த ஆதிக்க சாதிகளிடம் சாதி ரீதியாக அடக்கப்பட்டவர்கள் என்றடிப் படையில் நாம் கேட்பது இதைத்தான்.

"அடக்கபடும் எங்களின் பிரச்சனை தொடர்பாக நீங்கள் கதைக்கும் போதே நீங்கள் அவர்கள் என எங்களை சாதி ரீதியாக பிரிப்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிய வில்லையா?'

ஒருவருக்கான தொழிலை பிறப்பினடிப்படையில் தீர்மானிப்பது எதற்காக?'

அடக்கப்பட்ட சாதிகளுக்கு என தலைமுறை தலைமுறையாக ஒதுக்கப் பட்ட தொழில்களுக்கு பிற தொழில்களைப் போல் சரிசமனான அந்தஸ்து மதிப்பு நமது சமூகத்தில் இருக்கின்றதா?

"திருமணம் ஒன்று பேசப்படும் பொழுது முதன் முதலாக கேட்கப்படும் கேள்வி என்ன?'

"அடக்கும் சாதியைச் சேர்ந்த ஒருவர் தான் முதன்முதலாக சந்திக்கும் ஒருவருடனான உறவின் எல்லையை அல்லது வரையரையைத் தீர்மானிப் பதற்காக முதன் முதலாக கேட்கும் கேள்வி என்ன?'

இக் கேள்விகளை வாசிக்கும் பொழுது மிகவும் எளிமையானவையாகவும் மேலோட்டமானவையாகவும் ஆதிக்க சாதிகளுக்குத் தோன்றலாம். ஆனால் இக் கேள்விகளுக் கும் இதன் பதில்களுக்கும் பின்னால் ஆதிக்க சாதிய சித்தாந்தம் தொழிற்படுவதை சாதிய அடக்குமுறைக்கு முகம் கொடுக்கும் எங்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். இக் கேள்விகளுக்கான பதில்களில் சாதி முக்கியமான பங்கை வகிக்கிக்கும் என்பதை சாதாரணமாக சிந்திக்கும் எவரும் விளங்கிக்கொள்வர். அதுவும் "உயர் சாதி" எனத் தம்மைக் கூறிக் கொள்பவர்களிடமிருந்து இக் கேள்விகளுக்கு கிடைக்கும் பதிலில் வெளிப்படையாகவே சாதிய அடக்கு முறை இன்றும் நம் சமூகத்தில் நிலவுவதை ஒவ்வொருவரும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

அடக்கப்படும் சாதிகளுக்கு என ஒதுக்கப்பட்ட தொழில்களுக்கு, அவர்களின் பரம்பரைத் தொழில் என கட்டமைக்கப்பட்ட தொழில்களுக்கு நமது சமூகத்தில் பிற தொழில்களுக்கு இருக் கும் மதிப்போ அல்லது அந்தஸ்தோ இல்லை. அவை இழிவான தொழில்களாகவே ஆதிக்க சாதிகளால் இன்றும் நிலைநாட்டப்படுகின்றன. வேலை இல்லா திண்டாட்டம் நிலவிய போதும் இந்த வேலைகளை நோக்கி ஒருவரும் செல்வதில்லை. ஏனெனில் எந்த ஒரு வேலையும் இன்னுமொரு வேலையைவிட எந்தவகையிலும் குறைந்ததல்ல என்ற கருத்து, சிந்தனையாதிக்கம் நம் சமூகத்தில் இல்லை. அடக்கப்படும் சாதிகள் செய்யும் வேலைகள் சமூகத்தில் முக்கியமான பாத்திரங்களையாற்றிய போதும் இத் தொழில்களுக்கு மிகக் குறைவான ஊதியங்களே வழங்கப்படுகின்றன. ஆகவே நளவர், பள்ளர், பறையர், வண்ணார், சக்கிலிய சாதிகளாகிய நாம் செய்யும் தொழில்களுக்கு வைத்தியர், பொறியிலாளர் போன்றோருக்கு வழங்கப் படுவதுபோல் உயர்ந்த ஊதியங்கள் வழங்கப்படவேண்டும். ஆனால் இதுவரை இப்படி நடைபெறாததற்குக் காரணம் இன்றும் ஆதிக்க சாதிகளின் கருத்துக்கள் நம் சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துவது எனக் கூறலாம்..

சக்கிலியர் சாதி எனக் கூறப்படும் சமூகத்தில் பிறந்த ஒருவர் வேதங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தால் அவருக்கு ஐயர் தொழில் செய்யும் ஆர்வம் இருந்தால் அதைச் செய்வதற்கு சமூகத்தில் எந்தத் தடையும் அவருக்கு இருக்கக் கூடாது. அதாவது ஒருவர் தனக்கான தொழிலை தேர்வு செய்வது என்பது அவரது தனிப்பட்ட உரிமையாகும். தனது ஆர்வம் விருப்பம் என்பதனடிப்படையிலேயே தனது தொழிலை அவர் தெரிவு செய்ய வேண்டும். இதற்கு மாறாக பிறப்புரிமை, பரம்பரைத் தொழில், வேறு தொழில் செய்வதற்கு தகுதியற்றவர் என சாதியக் காரணங்களைக் கூறி ஒருவர் மீது அவர் விரும்பாத தொழிலை ஆதிக்க சாதிகள் திணிப்பது தடுக்கப்பட வேண்டும். யாரும் கூறலாம் இப்படி யெல்லாம் இப்பொ ழுது நடைபெறுவதில்லை என்று. அது தவறு. இப்பொழுதும் நடைபெறுகின்றன. இவை எம் சமூகத்தின் இயல்பாகப் போய் விட்டன. நமது சிந்தனைகளில் ஊறிவிட்டன.

நமது சமூகத்தில் காதல் திருமணங்களுக்கு இருக்கும் வரவேற்பைவிட பேச்சுத் திருமணங்களுக்கு இருக்கும் வரவேற்பே அதிகமாகும். இதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. சாதியமைப்பைக் கட்டிக் காப்பதில் அகமண முறை முக்கியமானதும் குறிப்பானதுமான பாத்திரத்தை ஆற்று கின்றது என்பதனாலாகும்.. ஏனெனில் பேச்சுத் திருமணங்களில் முதன் முதலாக உறுதி செய்யப்படும் விடயம் சாதியாகும். இதன் பின்பே பிறவிடயங்கள் கதைக்கப் படும். சாதி கதைக்கப்படாமல் பேச்சுத் திருமணம் ஒன்று நடைபெறுகின்றது என யாரும் கூறமுடியாது. ஒருவர் தனக்கான வாழக்கைத் துணையைத் தெரிவு செய்வது அவரது தனிப்பட்ட விடயமாகும். யாரும் தாம் விரும்பும் யாரையும் வாழ்க்கைத் துணையாக தெரிவு செய்வதற்கு விரும்புவதற்கு முழு உரிமையும் நம் சமூகத்தில் இருக்கவேண்டும். இதற்கு சமூகத்தில் எவ்விதமான தடைகளும் இருக்கக்கூடாது. ஆனால் துரதிர்ஸ்டவசமாக எமது சமூகத்தில் அப்படியில்லை. ஏன் பல காதல் திருமணங்கள் கூட சாதியைக் காரணங் காட்டி இன்றும் மறுக்கப்படுகின்றன அல்லது முறிக் கப்படுகின்றன. ஏனெனில் இந்தளவுக்கு சாதியக் கருத்தாக்கம் நம் சிந்தனைகளில் மட்டுமல்ல சமூக நடைமுறைகளிலும் இன்றும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

தமிழ்தேசத்தின் கணிசமான பகுதியினர் இப்பொழுது புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். இச் சமூகங்களில் காணப்படுவதாகக் கூறப்படும் கணிசமான தாராளவாத போக்கினால் தமது சாதியக் கலாசாரம் அழிந்துபோய்விடும் என்ற பயம் நம் தமிழ் சமூகத்திடம் காணப்படுகின்றது. ஆகவே தமிழீழத்தில் வாழ்ந்தபோது கடைபிடித்ததை விட மேலும் இறுக்கமாகவும் கறாறாகவும் தமது கலாசாரத்தைப் பின்பற்றுவதில் அக்கறையாகவும் அதேவேளை மிகவும் நுணுக்கமான முறைகளையும் பின் பற்றுகின்றனர். புலம் பெயர்ந்த சமூ கங்களில் மதிக்கப்படும் நடைமுறைப்படுத்தப்படும் குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளைக்கூட உள்வாங்குவதற்கு நம் தமிழ் சமூகம் தயக்கம் காட்டுகின்றது. ஏனெனில் அந்தளவிற்கு தமது சாதியக் காலசாரத்தில் அதீத பற்று.

ஆதிக்க சாதி ஒருவர் தான் சந்திக்கும் புதிய நபர் ஒருவரிடம் கேட்கும் கேள்விகள். நீ எந்த ஊர்? அந்த ஊரில் எந்த இடத்தில்? அந்த இடத்தில் யாருடைய சொந்தம்? ஆ! அப்ப இவர் சொந்தமா? தனக்குத் திருப்தியான பதில் கிடைக்கும் வரை கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பார். "தாழ்த்தப்பட்ட சாதி" எனக் கூறப்படும் பிரிவு எனப் புரிந்துகொண்டாரானால் அவரு டான உறவின் வரையரையை அவரது சிந்தனை விரைவாக தீர்மானித்துவிடும். ஆனால் இக்குறுகிய நேரஇடை வெளியில் அப்புதிய நபர் அடக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவராயின் எவ்வளவு துன்புறுத்தல் களுக்கு (டோச்சரிங்குக்கு) உள்ளாகியிருப்பார் என்பது எங்களுக்கு மட்டுமே தெரிந்த உண்மையாகும். ஏனெனில் அடக்கப் பட்ட சாதியைச் சேர்ந்த எங்களுக்குத் தெரியும் ஏன் இந்த கேள்விகள் எல்லாம் கேட்கப்படுகின்றன என்று.

அடக்கப்படும் சாதி ஒன்றில் பிறப்பது முற்பிறவியில் செய்த பாவம் என்றும் இது கடவுளின் படைப்பு என்றும் அடக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களே தம் மீதான அடக்குமுறையை ஏற்றுக் கொள்ளுமளவுக்கு ஆதிக்க சக்திகளின் சாதிய கருத்தாக்கம் மேலாதிக்க சித்தாந்தமாகத் தமிழ்தேசத்தில் இன்று தொழிற்படுகின்றது. எங்கள் தேசத்தின் நாளாந்த வாழ்க்கை முறைகளுடன் ஒன்று கலந்து வாழ்கின்றது. ஆனால் இப்படி நீண்ட நாட்களுக்கு அடக்கப்பட்ட மக்களை ஏமாற்ற முடியாது என்பதை ஆதிக்க சக்திகள் வெகுவிரைவில் புரிந்து கொள்வர்.

நாம் சாதிய அடக்குமுறை தொடர்பாக மேலே குறிப்பிட்டவை பிரதானமானதும் முக்கியமானதுமான உதாரணங்களில் சிலவே. தொடர்ச்சியான விவாதங்கள் மூலம் மேலும் தொடருவோம். அப்பொழுது சாதிய அடக்குமுறையின் ஆழத்தையும் இன்றும் நம் சிந்தனைகளிலும் நடைமுறை வாழ்க்கையிலும் எவ்வாறு ஒன்றித்து இயல்பாகவும் சாதாரணமாகவும் சாதிய சித்தாந்தம் செயற்படுகின்றது என்பதை மேலும் ஆழமாகப் புரிந்துகொள்வோம்.

நாம் இன்று பெற்றுள்ள அறிவு உண்மையிலிருந்து மிகவும் வெகுதூரத்திலிருக் கின்றது. ஏனெனில் உண்மை எம்மை நேரடியாக வந்து சேரவில்லை. அதாவது நாம் பெற்றுள்ள அறிவு என்பது உண்மை தொடர்பாக ஆதிக்க சக்திகள் உருவாக்கிய கருத்துக்களும் அபிப்பிராயங்களும் நீண்ட வரலாறு முழுவதும் ஆதிக்க சக்திகளா

( தொடர்ச்சி 7ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நாம் சாதாரண... (6ஆம் பககத் தொடர்ச்சி)

லேயே பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு இன்று எம்மை வந்தடைகின்றன. இதைத் தான் நாம் அறிவு எனக் கூறுகின்றோம். அதாவது உண்மை என்பதும் நாம் பெற்றுள்ள அறிவு என்பதும் இரண்டும் ஒன்றல்ல. இரண்டுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் அதிகமாகும்.

இதனடிப்படையில் அடக்கப்பட்ட சாதியப்பிரிவுகள் அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் எனக் கூறப்படுவோர் தொடர்பாக சமூகத்தில் நிலவும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உண்மையானவையல்ல. ஏனெனில் இவை ஆதிக்க சாதியப்பிரிவுகளால் தமது நலன்களையடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் நிலைநாட்டப்பட்ட மேலாதிக்க கருத்துக்களாகும். ஆகவே இக் கருத்துக்கள் உண்மையானவையல்ல என்று சாதிய சிந்தனையாளர்களும் வரலாற்றாசிரியர்களும் கூறுகின்றனர். ஆகவே நாம் பெறும் அறிவை மேலும் மேலும் ஆழமாக ஆய்வு செய்து கொண்டு செல்ல வேண்டும். நாம் பார்க்கும் கேட்கும் அறியும் ஒவ்வொன்றையும் கேள்வி கேட்போம். அப்படி செய்வோமாயின் சாதிய அடக்கு முறை தொடர்பாக எழுதப்பட்ட இக் கட்டுரையில் கூட எந்தளவுக்கு ஆதிக்க சாதிய சித்தாந்தம் இருக்கின்றது என்பதைக் காணமுடியும்.

ஆம், நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது உண்மையைத் தேடி.

எங்கெல்லாம் அடக்குமுறைகளும் அதிகாரத்துவமும் நிலவுகின்றனவோ அங்கெல்லாம் அதற்கு எதிராக எம் குரல்கள் ஒலிக்கட்டும். எங்கள் கைகள் ஒன்றிணைந்து போராடட்டும்.

தமிழ் தேசத்தின் மீதான அடக்குமுறைக்கு எதிராக தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழ் தேசம்,

நம் தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழ் தேசம்,

நம் தேசத்தின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் தமிழ் தேசம்,

இந்தப் போராட்டங்களில் எல்லாம் முன்னணியில் நின்று போராடும், இரத்தத்தைச் சிந்தும் தமிழ் தேசத்தின் ஒரு பகுதியான நாங்கள் சாதிரீதியாக அடக்கப்படுவதை தமிழ் தேசம் பார்க்கமறுக்கின்றது...

எங்களின் சாதாரண ஜனநாயக உரிமைகள் கூட மறுக்கப்படுவதை தமிழ் தேசம் கண்டுகொள்ளமறுக்கின்றது.

கிணற்றில் தண்ணீர் எடுப்பது முதல் கோயி லுக்குள் நுழைவதுவரை நமது அன்றாட வேலைகளைக் கூட செய்வதற்கான உரிமை கள் மறுக்கப்படுகின்றன.

நமது உடல்களைத்தொடுவது தம்மை அசிங்கப்படுத்திவிடும் எனக் கூறி எம்மை இழிவு படுத்துவதை தமிழ்தேசம் புரிந்து கொள்ள மறுக்கின்றது.

ஒரு அடக்குமுறையை விட இன்னொரு அடக்குமுறை எந்தவகையிலும் குறைந்ததல்ல. சாதி ரீதியாக அடக்கப்படும் எங்கள் மீதான அடக்குமுறை பிற அடக்குமுறைகளைவிட எந்தவகையிலும் குறைந்ததல்ல.

தமிழ் தேசத்தின் உரிமைகளுக்காகவும் விடிவிற்காகவும் போராடுவதற்கு எந்தளவுக்கு தமிழ் தேசத்தின் ஒரு பகுதியான எமக்கு உரிமை உண்டோ அதேயளவு எம் மீதான சாதீய அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கான உரிமையும் நமக்கு உண்டு. இதை தடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

# திணிக்கப்பட்ட போரை எதிர்த்து நிற்போம் !

1999ஆம் வருடம் இன அழிப்புக்கென ஸ்ரீ லங்கா பயங்கரவாத அரசு ஒதுக்கியுள்ள தொகை 57 பில்லியன்கள் ஆகும்.

1983 தொடக்கம் 1994 வரைக்கும் அரசு யுத்தத்துக்கு செலவிட்ட தொகைக்கு சமனான ஒதுக்கீட்டை இந்த வருடத்துக்கு ஒதுக்கியுள்ளது.



இன்று அரசு பெறுகின்ற வருவாயில் 30 வீதத்தை யுத்தத்துக்கு செலவிடுகிறது. இது அரசின் மொத்தச் செலவீனத்தில் 13.9 வீதம் ஆகும்.

இனவாத அரசுடன் கைகோர்த்துள்ள அமெரிக்க பயங்காரவாத அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடக்கியழிக்க இலங்கை அரசுக்கு பயிற்சிகளை போர்க் கருவிகள், போர்த் தொழில் நுட்பங்களையும் வெளிப்படையாகவே வழங்குகிறது.

இலங்கைக்கான ஆயுதப் பயிற்சிக்கென அமெரிக்கா 1999ஆம் ஆண்டுக்காக ஒதுக்கியுள்ள தொகை இரண்டு லட்சம் அமெரிக்க டாலர்கள் என பென்டகனின் பிரிவொன்றான ACDA தெரிவிக்கிறது மேலும் 2000ஆம் ஆண்டுக்கு இரண்டே கால் லட்சத்தை ஒதுக்கத் திட்டமிட்டுள்ளது.

1999இலிருந்து இரண்டு வருடங்களுக்குள் 20 மில்லியன்களுக்கு அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களைக் கொள் வனவு செய்துள்ளதென்றும் அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

உலகில் ஆயுதக் கொள்வனவு குறித்த 1996இல் கணிப்புக்குள்ளான 167 நாடுகளில் இலங்கை 67வது நாடு எனத் தெரிவிக்கும் அமெரிக்காவின் அவ் அறிக்கையானது 1996இல் மொத்தம் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

அழித்தொழிப்புக்காக எதிரி இத்தனை தூரம் படைக்குவிப்பையும், போர்க்கருவிகள் குவிப்பையும் செய்து கொண்டு அவ் அழித்தொழிப்புக்காக உலகின் மோசமான பயங்கரவாத நாடுகளுடன் கைகோர்க்கின்ற போது, அவ் அழித்தொழிப்பிலிருந்து முற்றிலும் தமது மக்களைப் பாதுகாக்கவும், தமது மக்களுக்கான சுதந்திரத்துக்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடும் தார்மீக உரிமை ஏன் எமக்கில்லை? எதிரி தனது அடக்குமுறைக்கு ஆதரவாக உலகப் பயங்கரவாத சக்திகளுடன் கை கோர்க்கும் போது, உலகின் அடக்கப்படும் மக்களின் விடுதலைக்காகப் போராடும் புரட்சிகர இயக்கங்களுடன் கைகோர்க்க ஏன் எமக்கு முடியாது?

## நமது பிரச்சினை... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை போராளிகளை புலித்தலையுடன் காட்டும் இந்த கட்அவுட் மூலம் இவர்கள் எதனை தமது மக்களுக்கு கூற முனைகின்றனர். வெறுமனே ஒரு குறியீடு என்று அவர்கள் சொல்லக்கூடும். தற்செயலாக இத்தவறு நடந்து விட்டது என்றும் அவர்கள் கூறக்கூடும். அரசியல் அடக்குமுறைகளின் தாற்பரியத்தை மூடிமறைத்து விடுதலை போராளிகளை மிருகங்களாக சித்தரிக்கும் முயற்சியாகத்தான் நாங்கள் இதனை கருதுவோம்.

இப்படிப்பட்ட சோவினிச சிந்தாந்தத்தை தமது மக்களின் மண்டைகளுக்குள் செருகிவிட்டு பின்னர் எப்படி இவர்கள் சமாதானத்தை தருவிக்கப்போகின்றார் கள்? சக தேசங்களை சமத்துவமாக மதித்து , அடக்குமுறைகளை நிறுத்தி அரசியல் உரிமைகளை வழங்குவது எப்படி இவர்களால் முடியப்போகின்றது? சிறிலங்காவில் செயற்படும் சர்வமத தலைமைக ளின் தூதுக்குழுவிற்கே இந்த ஆதிக்க சிந்தாந்த குறியீடுகள் உறைக்கவில்லை எனின் , சக தேசத்தின் உணர்வுகளை எந்த ளவிற்கு இது புண்படுத்தும் என உணரவி ல்லை எனின், சொந்த சிங்கள மக்களின் இரத்தத்தில் தோய்ந்து, இளம் தலைமுறையி னரில் ஆயிரக்கணக்கானவர்களை உயிரு டன் எரித்து அரசியல் பிழைப்பு நடாத்தும் இந்த பேரினவாத ஆளுங்கும்பலிடம் ஈழத் தமிழராகிய நாம் எதனை எதிர்பார்ப்பது?

ஆயுதங்களையும் தமிழீழ கோரிக்கையையும் கைவிடச்சொல்வதற்கு என்றால் இந்த சமாதான பிரியர்களுக்கு கொள்ளை ஆனந்தம்தான்.

சமாதானத்தின் காவலர்களே! எங்களை எங்கள் பாட்டிற்கு விட்டுவிடுங்கள். எமக்குரிய சுதந்திர அரசையும், சமூக கட்டமைப்புகளையும் நாமே படைத்துக் கொள்வோம். உங்கள் மக்களை திரட்டி உங்களை பீடித்திருக்கும் இனவாத பிற்போக்கு ஆதிக்ககும்பலை கவிழ்க்க நீங்கள் போராடுங்கள். பழைய குப்பைகளை எரித்து புதிய வாழ்வை அமைத்திடுங்கள். அப்போது யுத்தம் நிற்கும், சமாதானம் கொழிக்கும்.

## தமிழீழ அரசு.... (2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால் கட்டுப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்படுகின்றார்கள் போன்ற உண்மைகளை நாம் புரிந்து கொள்வோமாயின், இந்த உண்மைகள் அனைத்தும் சிறீலங்கா அரசியலில் விதிகளாக செயற்படுகின்றன என்பதை புரிந்து ஏற்றுக் கொள்வோமாயின், சிறி லங்கா அரசின் ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபட்டு, எமக்கென இறைமையும் தன்னாதிக் கமும் கொண்ட ***தனியான அரசை*** அமைப் பதே எமக்குள்ள ஒரே வழி, ஒரே தேர்வு என்ற உறுதியான தர்க்க ரீதியான முடிவை நாம் பெறுவோம். இந்த இலக்கு நோக்கி நாம் உறுதியாகவும், பிரக்ஞைபூர்வமாகவும் செயற்படுவதால் மட்டுமே, எமது தேச இருப்பை, எமது தாயகத்தில் நாம் என்றென்றைக்குமாக நிலைநாட்ட முடியும்.

எமது தாயகத்தை ஆக்கிரமித்து, எம் தேச இருப்பை சிதைத்தழித்து, எமது மக்களை நாளாந்தம் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்ற ஈவிரக்கமற்ற எதிரியுடன் நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்த எதிரி எமது தேச இருப்பை ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை, எமது உரி மைகளில், நலன்களில் என்றுமே அக்கறை கொள்ளவில்லை. எமது தனித்து வத்தை, கலாச்சார மரபுகளை, வாழ்க்கை முறைகளை ஒரு போதும் மதித்ததில்லை என் பதை வரலாறு எமக்கு திரும்பத் திரும்ப வன்மையாக உணர்த்தி வந்திருக்கின்றது. இதன் பின்னரும், யாரோ ஒரு சிங்கள அரசியல் வாதியின் 'கருணையில்' 'மனிதாபிமானத்தில்' 'புரிந்துணர்வில்' எமது தேசத்தின் வாழ்வை ஒப்படைப்போமாயின், அது எம் மீது, நாமே தூக்குக் கயிற்றை மாட்டுவதற்கு சமனாகும்.

எனவே எமது எதிரியின் சுயரூபத்தை தெளிவாக அடையாளம் காண்போம். எம்மை ஆக்கிரமிக்கவும், அடிமைப்படுத்த வும் இந்த எதிரி மேற்கொள்கின்ற அனைத்து வழிமுறைகளையும் துல்லியமாக புரிந்து கொள்வோம். எமது தேச இருப்பை அழித்தொழிப்பதற்காக தனது சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தி வருகின்ற இந்த எதிரியின் ஈவிரக்கமற்ற கொடிய நடவடிக்கைகளை எதிர்த்து முறியடிப்போம். இந்த எதிரியை எமது மண்ணில் இருந்து துடைத்தெறிவோம்! ஒரு வலிமைமிக்க தேசமாக நாம் உயர்ந்தெழுவோம்! எமது தாயகத்தில், எமக்கென ஒரு சுதந்திர அரசை கட்டியெழுப்புவோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தாமரை

**ஒன்றிணைந்து போராடுவோம்!**

‘THAMARAI’
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom


# சுதந்திரத் தமிழீழம் படைப்போம்!!

அன்பார்ந்த மக்களே!

புரட்சிகர வணக்கங்கள்.

அரசியல், சமூக புரட்சிகளை நிகழ்த்தி வரலாற்றைப் படைப்பவர்கள் நீங்கள். உங்களின் கூறாய் அமைந்து, தமிழ் தேசத்தின் ஆன்மாவாக உருப்பெற்றுள்ள “தமிழீழ மக்கள் கட்சி”யின் முதலாவது அரசியல் ஏடான “தமிழீழம்” உங்கள் கைகளில் தவழ்கிறது. எமது கட்சியின் முதலாவது பகிரங்க செயற்பாடு இதுவென்ற வகையில் இக் கட்சியின் பிரகடனத்தை இவ்விதழினூடாகவே மேற்கொள்கின்றோம். உங்கள் முன்னிலையிலும் சகதேசங்கள் மற்றும் சர்வதேச சமூகங்களின் முன்னிலையிலும் எமது கட்சியை பிரகடனம் செய்வதில் பெருமையடைகின்றோம், உரம் பெறுகின்றோம்.

கொடிய சிங்களப் பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும் பிராந்திய, ஏகாதிபத்திய சக்திகளின் நெருக்குதல்களுக்கு எதிராகவும் தமிழ் தேசம் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றது. இந்த வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தினூடாக அதன் பிரிக்க முடியாத கூறாகவும், தவிர்க்க முடியாத வரலாற்று தேவையாகவும் ***தமிழீழ மக்கள் கட்சி*** ஆனது பரிணமித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் நன்கு பரிச்சயமுள்ள எவருக்கும் நாம் புதியவர்கள் அல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆயுதமேந்திய போராட்டமாக வெடித்தெழுந்த ஆரம்ப கட்டத்திலேயே விடுதலை அமைப்புகளை உருவாக்குவதிலும் அவற்றின் வளர்ச்சிலும் தீவிர பங்குகொண்டவர்கள்: பல்வேறு விடுதலை அமைப்புகளிலும் தம்மை இணைத்துக்கொண்டு போராட்டத்தின் முக்கிய கட்டங்களில் தீவிர பங்களிப்புகளை வழங்கியவர்கள்: இன்னும் போராட்டத்திலும் விடுதலையமைப்புகளினுள்ளும் மேலெழுந்து வந்த பிற்போக்கு தனங்கள் ஏதேச்சாதிகரரரங்கள், மக்கள் விரோத போக்குகள் போன்றவற்றிற்கெதிராக நபர்களாகவும் குழுக்களாகவும் விடுதலை அமைப்புகளுக்கு உள்ளிருந்தும் வெளியேறியும் போராடியவர்கள்: இன்னும் போராட்ட உணர்வு கொண்ட இளம் தலைமுறையினர் போன்றோர்களின் புரட்சிகர சேர்க்கையில் உருவானதே தமிழீழ மக்கள் கட்சியாகும். இக்கட்சியின் இன்றைய உருவாக்கம் ஒரு நீண்ட தொடர்ச்சியான கடின உழைப்பின் பெறுதியாகும். இவ்வியக்கப்போக்கின் தொடக்கமாக அமைந்தது “***தீப்பொறி***” எனும் பெயரில் *1985* இல் பத்திரிகை வெளியிட்டுச் செயற்பட்ட குழுவாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது தேசிய விடுதலை போராட்டத்தில் தொடர்ந்து நிலவி வந்த கோட்பாட்டு, அரசியல் மற்றும் தாபன ரீதியான தவறுகளையும் குறைபாடுகளையும் இனங்காண்பதிலும், அவற்றை களைந்து புரட்சிகர திசைவழியில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் உருவாக்குவதிலும் பதினைந்து வருடகாலம், நாம் கடின உழைப்பை செலுத்தியுள்ளோம். இவ்விடைக்காலத்தில் “***உயிர்ப்பு***” எனும் கோட்பாட்டு சஞ்சிகையை வெளியிட்டோம். இவ்வேட்டின் மூலமாகவும் நேரடியாகவும் எமது கோட்பாட்டு, அரசியல் புரிதல்களை போராட்டத்தில் அக்கறை கொண்ட சக்திகளுடன் பரிமாறிக்கொண்டோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமானதும் உயர் ஜனநாயக விழுமியங்களை அடிப்படையாக கொண்டதுமான, ஒரு அரசியல் சமூக அமைப்பை மக்களின் தீவிர பங்குபற்றுதலின் மூலமாக படைக்க வேண்டும் என்பது தமிழ் தேசத்தின் அனைத்து புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த பிரிவினரின் கூட்டுக்கடமையாகும் என்பதைப் புரிந்து கொண்டோம். ஈற்றில் புரட்சிகர அரசியல் கட்சியின் அவசியத்தை உணர்ந்தேற்றுக்கொண்டோம். இப்படிமுறையினூடாக நாம் குழு நிலையிலிருந்து அமைப்பாகினோம். அமைப்பு வடிவில் இருந்து தமிழீழ மக்கள் கட்சியாக தற்போது பரிணமித்துள்ளோம்.

*1998* சித்திரை மாதத்தில் எமது கட்சியின் முதற்பேராயத்தை நாம் வெற்றிகரமாக நிறைவு செய்தோம். இன்று உங்கள் முன் உங்கள் கட்சியாகிய “***தமிழீழ மக்கள் கட்சி***”யை பிரகடனம்செய்கின்றோம். தமிழ் தேசத்தின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய புரட்சிகர சித்தாந்தமும் செயற்பாடுகளும் பரிணமிக்கவும், அவை காத்திரமான முறையில் வளர்ச்சி பெறவும், நிலைக்கவும் ஒரு அடித்தளத்தை உருவாக்கியுள்ளோம். இக்கட்சி தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் எமது இலட்சியமான தமிழீழ குடியரசை நிறுவுவதிலும் ஒரு புதிய ஆதர்சமாக அமையும் என உறுதி பகர்கின்றோம்.

தேசியப் பிரச்சனை என்பது அடிப்படையில் ஒரு அரசியல் ஜனநாயகப் பிரச்சனையாகும். நமது விடுதலைப் போராட்டத்தில் மக்கள் தமது அரசியல், சமூக, பொருளாதார கோரிக்கைகளை சுதந்திரமாக முன்வைத்து அமைப்பு ரீதியில் போராட வேண்டும். அவர்கள் இன்றைய போராட்டத்தில் உயிர்த்துடிப்புடன் செயற்படமுடியாது வெறும் பார்வையாளர்களாக இருந்து வரும் நிலைமை முற்றிலும் மாறவேண்டும். இன்னும் அரசியல் விழிப்புணர்வு கொண்ட அனைத்து போராட்ட சக்திகளும் தமது சக்திக்கேற்ற விதத்தில் போராட்டத்தில் பங்களிப்பு செய்ய வேண்டும். மிக அரிதான வளங்களை கொண்ட எமது தேசத்தை பொறுத்தவரையில் இவையெல்லாம் இன்றியமையாததாகும்.

எனவே மக்கள் திரள் அமைப்பாகி, செயலூக்கமாக பங்குபற்றி உறுதியுடன் போராடி தமது விடுதலையை வென்றுகொள்ளவும், புரட்சிகர முற்போக்கு சக்திகள் தமது தேசபக்த அரசியலை தீவிரமாக முன்னெடுப்பதற்குமான சூழலை ஏற்படுத்துவதில் எமது கட்சி முன்னிற்கும். தலைமை தாங்கி செயற்படும்.

தேசியவிடுதலை என்பது குறிப்பிட்ட மக்கள் தம்மீதான சகல அடக்குமுறைகளில் இருந்தும் விடுபடுவதை உள்ளடக்குகிறது. எனவே எந்தவொரு அடக்கப்படும் சமூக சக்தியும் தாமாகவே முன்வந்து போராடாமல் தமது உரிமைகளை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. இந்தவகையில் எமது தேசத்தின் பெரும்பான்மையினராக அமையும் அடக்கப்படும்-விளிம்பு நிலை மக்கள் தமது விடுதலையை வென்றெடுப்பதற்கு தம்மை அமைப்பாக்கி போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த ஆற்றல் அவர்களிடம் நிறைந்துள்ளது. அதுதான் வரலாறு. இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எமது கட்சி இப்பிரிவினரின் முன்னணிப்படையாக இருந்து தலைமை தாங்கிச் செயற்படும்.

ஈழத்தமிழருக்கும் சகதேசங்களுக்கும் இடையிலான உறவானது தற்போது மிக மோசமாக சீர்குலைந்துள்ளது. இதனை சீரமைப்பது தமிழீழ விடுதலைக்கு இன்றியமையாத விடயமாகும். நமது கடமையுமாகும். எனவே இந்த அவசர வரலாற்று பணியை எமது கட்சி வெளிப்படையாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளும்.

எமது விடுதலைப்போராட்டம் வெற்றி பெற தமிழகத்திலுள்ள மக்களின் ஆதரவும் பங்களிப்பும் மிகவும் பிரதானமாகும். இந்த ஆதரவும் பங்களிப்பும், இந்தியாவின் ஆளும் வர்க்க மற்றும் ஆதிக்க சக்திகளினால் திட்டமிட்டு சீர்குலைக்கப்பட்டுள்ளது. எமது போராட்டம் குறித்த தப்பெண்ணங்கள் இச்சக்திகளின் சாதனங்களால் பரப்பப்பட்டுள்ளன. இவற்றை களைந்து தமிழக மற்றும் இந்திய மக்களினதும் புரட்சிகர முற்போக்கு சக்திகளினதும் ஆதரவை பெற்றுக்கொள்ள எமது கட்சி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அசைக்க முடியாத அடித்தளத்தை உருவாக்க பாடுபடும்.

சர்வதேச அளவில் இன்று எமது விடுதலைப்போராட்டம் குறித்து நிலவும் தவறான அபிப்பிராயங்களையும் சந்தேகங்களையும் களைவதிலும் சர்வதேச அளவில் புரட்சிகர முற்போக்கு ஜனநாயக சக்திகளின் பலமான ஆதரவை பெற்றுக் கொள்வதிலும் எமது கட்சி முனைந்து செயற்படும். எமது போராட்டத்தின் நீதியான தன்மையை, அதன் தார்மீகத்தை உலகம் முழுவதும் மீளவும், பிரகடனம் செய்யும்.

சுதந்திரம் என்பது ஒவ்வொருவரதும் பிறப்புரிமையாகும். இது மக்கள் அமைப்பாவதற்கும் ஒன்று கூடுவதற்கும் தமக்கு சரி எனப்படும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் உள்ள உரிமைகளை உள்ளடக்கியதாகும். தாம் சரியென தேர்ந்தெடுக்கும் ஒரு இலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்து செயற்படுவதற்கான சுதந்திரம் என்பது, எந்தவொரு சமூகப் பிரிவினர் தொடக்கம் ஒரு தனிப்பட்ட புரட்சியாளர் வரைக்குமுள்ள ஒரு அடிப்படை உரிமையாகும்.

எந்தவொரு போராட்ட வரலாற்றிலும் பல்வேறு சமூக பிரிவுகள் தமது நலன்களை அடையும் விதத்தில் தமக்கென தனியான அமைப்புகளை உருவாக்குவதும், அவற்றின் பலத்தில் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதும் தவிர்க்க முடியாதது. மேலும் ஒட்டுமொத்த போராட்டத்தின் நன்மை கருதி சக அமைப்புகளுடன் குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராடுவது வரலாற்று நியதியாகவும் உள்ளது. ஒரு போராட்டத்தில் தனியொரு அமைப்பு மட்டும் இருக்க வேண்டும் என்பது தேசத்திற்கும் புரட்சிக்கும் நீண்ட காலத்தில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடியதாகும். இதனை வலியுறுத்தும் எமது கட்சியானது இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு புரட்சிகர, தேசபக்த சக்திகள் அரசியல் அரங்கில் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயற்படும் உரிமைக்காகவும், இவ்வாறு போராட்டத்தில் பங்குகொள்வதற்கான சூழலை உருவாக்குவதற்காகவும் விட்டுக்கொடாது தொடர்ந்து போராடும். தமிழீழ விடுதலையை இலக்காக கொண்டு போராடும் எந்தவொரு அமைப்புடனும் குழுக்களுடனும் ஐக்கிய முன்னணி அமைத்து விடுதலையை வென்றெடுப்போம் என அறைகூவல் விடுக்கின்றோம்.

நமது தேசம் கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக எத்தனையோ வகையான அடக்குமுறைகளை எதிர்கொண்டு தொடர்ச்சியாக விடுதலைக்காகப் போராடி வருகின்றது. அனைத்து வகை அடிமைத் தளைகளையும் தகர்த்து முன்னேறவும் வரலாற்று சாதனைகள் படைக்கவும் துடிக்கும் எமது தேசத்தை ஆக்கிரமிப்பாளர்கள் தமது அடிமைத் தளையில் நிரந்தரமாக வைத்திருக்க பிரயத்தனம் செய்வது மட்டுமன்றி அது முடியாதென அறிந்து இனவொழிப்பையும் தீவிரப்படுத்தியுள்ளனர். எனவே இன்னும் பன்மடங்கு வலுவுடன் எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உண்மை அன்றாடம் நமக்கு உணர்விலும் அறிவிலும் அறையப்படுகிறது. எமது விடுதலையானது, ஆக்கிரமிப்பாளர்களின் அழிவாகும். எமது விடுதலையானது, அடக்கப்படும் சகதேசங்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் விடிவுக்கு கூறும் கட்டியமாகும்.

இன்று நாம் மூட்டும் இச்சிறிய பொறி விரைவில் பெருந்தீயாக மாறி அனைத்து விதமான அடக்கு முறைகளுக்கும் சமூக அநீதிகளுக்கும் முடிவுகட்டும். இந்த மாபெரும் இலட்சியப் பணியில் கரங்கோர்த்து செயற்பட அனைத்து புரட்சிகர, முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அறைகூவுகின்றோம்.

தமிழீழ மக்கள் கட்சியின் இந்த அரசியல் ஏடானது பல தடைகளையும மீறி உங்கள் கரங்களை வந்தடைகின்றது என்பதை நன்கு அறிவீர்கள். இதனை இயன்றவரையில் விரிவாக பரப்புவதற்கு உங்களால் ஆன அனைத்தையும் செய்யுங்கள். அக்கறையுள்ளவர்களுக்கு படிக்கக்கொடுங்கள். பிரதிகள் எடுத்து வினியோகியுங்கள். நண்பர்கள் சகதோழர்களுடன் எமது கருத்துக்களையும் செயற்பாடுகளையும் தொடர்ந்து விவாதியுங்கள். பெறப்படும் கருத்துக்களையும் உங்கள் வழிகாட்டுதல்களையும் அவசியம் எமக்கு எழுதுங்கள். எவ்வழியில் இப்பத்திரிகை தங்களை வந்தடைந்ததோ அதே வழியில் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது தேச விடுதலைப் போராட்டத்தில், எதிரிகளை அடித்து விரட்டுவதில் தமது இன்னுயிரைத் தந்த அனைத்துப் போராளிகளையும் மக்களையும் இங்கு நாம் நினைவு கூருகின்றோம். இன்னும் கடந்த காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தில் நிலவிய அராஜகம் மற்றும் உட்கொலைகளுக்கு எதிராகவும், ஒட்டுமொத்தமாக விடுதலைப் போராட்ட அமைப்புகள் மேற்கொண்ட மக்கள் விரோத, ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவும் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் செயற்பட்ட காலத்தில் பெறுமதி மிக்க பல தோழர்களை நாம் இழந்துள்ளோம். இவ்வாறக நீதிக்காகவும் மக்களுக்காகவும் நபர்களாக, குழுக்களாக குரல் கொடுத்து செயற்பட்ட பல போராளிகளையும் எமது தேசம் இழந்துள்ளது.

இவர்கள் அனைவருக்கும், இப்போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளுக்கும் மக்களுக்கும் எமது கட்சி தலைசாய்த்து அஞ்சலி செலுத்துகின்றது. எந்த இலட்சியத்தை அடைய அவர்கள் தம்மை அர்ப்பணித்தார்களோ அந்த இலட்சியத்தை நிறைவு செய்ய எமது கட்சி தொடர்ந்தும் வலுவுடன் போராடும் என நாம், உங்கள் முன் பிரதிக்ஞை செய்கின்றோம்.

**மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும் !**

ஆசிரியர் குழு

*15-04-1999*